வடக்கின் முதல் நாளிதழ் – Estd 1959
Reg. No. : P. 1632
விலை ரூ. 30/=

# ஈழநாடு
Eelanadu ඊළනාඩු




Email : eelanaduweekly@gmail.com | மலர் : 05 | 23.12.2023 சனிக்கிழமை | இதழ் : 355 | பக்கங்கள் : 12

# திட்டமிடப்படாத அபிவிருத்தியாலேயே வடக்கில் வெள்ள அனர்த்த நிலைமை!



## யாழ். பல்கலை விரிவுரையாளர் பிரதீபராஜா

### 160மி. மீ. மழை பெய்தால் யாழ். மாநகரம் வெள்ளக்காடாகும்!

**யாழ்ப்பாணம், டிசெம்பர் 23**
**வடக்கு மாகாணத்தில் மேற்கொள்ளப்பட்ட அபிவிருத்தி நடவடிக்கைகள் சரியான திட்டமிடல் இல்லாமல் இடம்பெற்றுள்ளன.**
**இதனாலேயே, வடக்கில் பெரும் வெள்ள அனர்த்தம் ஏற்படுகின்றது. ஒரே தடவையில் 160 மில்லிமீற்றர் மழை பொழிந்தாலே யாழ்ப்பாணம் மாநகரத்தின் பெரும்பாலான வர்த்தக நிலையங்களுக்குள் வெள்ளம் புகுந்துவிடும் நிலைமையே உள்ளது.**

- இவ்வாறு யாழ். பல்கலைக்கழகத்தின் புவியியல் துறையின் மூத்தவிரிவுரையாளர் கலாநிதி நாகமுத்து பிரதீபராஜா தெரிவித்துள்ளார்.
டான் தமிழ் ஒளியின் 'ஸ்பொட்லைற் 'நிகழ்ச்சிக்கு அவர் அளித்த நேர்காணலிலேயே மேற்கண்டவாறு தெரிவித்தார்.
வழக்கத்துக்கு மாறாக அண்மைக் காலங்களில் வடக்கு வெள்ள அனர்த்தத்தால் வெகுவாகப் பாதிப்படைகின்றது. இது தொடர்பாக அவரிடம் எழுப்பப்பட்ட கேள்விக்கு பதிலளிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.
வடக்கில் முன்னெடுக்கப்பட்ட அபிவிருத்தித் திட்டங்கள் சரியான திட்டமிடல் கள் இல்லாமல் இடம்பெற்றன - 11

## பருத்தித்துறையில் 30பேர் கைதாகினர்

வடமராட்சி, டிசெ.23
பருத்தித்துறை பொலிஸார் முன்னெடுத்த விசேட போதை ஒழிப்பு நடவடிக்கையில் 30 பேர் கைது செய்யப்பட்டனர்.
நாடுதழுவியதாக விசேட போதைப் பொருள் ஒழிப்பு சோதனை நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டு வருகிறது. இதன் ஒரு பகுதியாக பருத்தித்துறை பொலிஸ் பிரிவிலும் கடந்த 17ஆம் திகதி இந்த விசேட நடவடிக்கை முன்னெடுக்கப்படுகின்றது.
இதில், ஹெரோயின் போதைப் பொருளுடன் 16 பேரும், கசிப்புடன் நான்கு பேரும், கஞ்சாவுடன் இருவரும், போதை 11

## ஆதாரங்கள் இருந்தால் கெஹலிய கைதாவார்!

### பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர்

கொழும்பு, டிசெ. 23
தரமற்ற மருந்து இறக்குமதி செய்யப்பட்ட சம்பவத்துடன் தொடர்புடைய உறுதியான ஆதாரங்கள் இருந்தால் முன்னாள் சுகாதார அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல கைது செய்யப்படுவார் என பொது பாதுகாப்பு அமைச்சர் டிரான் அலஸ் தெரிவித்துள்ளார்.
முன்னாள் சுகாதார அமைச்சர் 11

## டெங்கு நோய் ஒழிப்பு: யாழ். மாநகரில் இன்று விசேட செயல்திட்டம்!

யாழ்ப்பாணம், டிசெ. 23
பெருகிவரும் டெங்கு நோய் பரவலை ஒழிக்கும்நோக்கில் யாழ். மாநகர சபை சுகாதார மருத்துவ அதிகாரி பணிமனையின் எல்லைக்குள் இன்று சனிக்கிழமை ஒன்றிணைந்த கொள்கலன் சேகரிக்கும் நிகழ்வு முன்னெடுக்கப்படவுள்ளதாக பொறுப்பதிகாரி 11

## ரணிலை நம்பவேண்டாம் என்று புலிகள் கூறியது இன்று நிரூபணம்!

### கஜேந்திரகுமார் எம். பி.



மட்டக்களப்பு, டிசெ. 23
2005ஆம் ஆண்டிலேயே தற் போதைய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை நம்ப வேண்டாம் என தமிழீழ விடுதலைப் புலிகள் தெரிவித்தனர். அப்போது இது குறித்து பலரும் குழம்பினர். ஆனால் அன்று தீர்க்கதரிசனமாக புலிகள் தெரிவித்ததை இன்று ரணில் விக்கிரமசிங்க அவருடைய செயல்பாடுகளால் நிரூ பித்துள்ளார் என பாராளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தெரிவித்துள்ளார்.
மட்டக்களப்பு ஊடக மையத்தில் நேற்று நடத்திய செய்தியாளர் சந்திப்பிலேயே இவ்வாறு தெரிவித்தார் 11
அதில், அவர் மேலும்

## சிறை, பொலிஸ் காவலில் இந்த ஆண்டு 8 மரணங்கள்

### 200இற்கும் மேற்பட்ட சித்திரவதைகள்

கொழும்பு, டிசெ. 23
இந்த ஆண்டில் சிறை, பொலிஸ் காவலில் 8 மரணங்கள் இடம்பெற்றுள்ளன. அத்துடன், சித்திரவதைகள் தொடர்பில் 200இற்கும் மேற்பட்ட முறைப்பாடுகள் கிடைத்துள்ளன என்று இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.
அந்த ஆணைக்குழு, நாட்டில் இந்த வருடம் சிறை காவல் மற்றும் பொலிஸ் காவலில் இடம்பெற்ற சித்திரவதை சம்பவங்கள் தொடர்பில் விசேட அறிவிப்பை வெளியிட்டுள்ளது.
அதில், சந்தேகநபர்கள் பொலிஸ் காவலில் இருந்த போது சித்திரவதைக்கு உட்படுத்தப்பட்டமை, காவலில் உள்ள பிரச்னைகள் மற்றும் தனிப்பட்ட மரணங்கள் தொடர்பாக இந்த ஆண்டில் 200இற்கும் 11

## தமிழக மீனவர்கள் 25 பேருக்கு மறியல்

பருத்தித்துறை, டிசெ. 23
பருத்தித்துறை கடற்பரப்பில் வைத்து கடற்படையினரால் கைது செய்யப்பட்ட 25 தமிழக மீனவர்களுக்கும் எதிர்வரும் 28 ஆம் திகதி வரை விளக்கமறியலை நீடித்து பருத்தித்துறை நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.
இலங்கை கடல் எல்லைக்குள் மீன்பிடித்த குற்றச்சாட்டில் பருத்தித்துறை கடற்பரப்பில் வைத்து கடந்த 9 ஆம் திகதி 2 படகுகளுடன் நாகபட்டினத்தை சேர்ந்த 25 மீனவர்கள் கைது செய்யப்பட்டனர்.
இவ்வாறு கைதானவர்கள் நேற்று பருத்தித்துறை நீதிமன்ற நீதிவான் கிருசாந்தன் பொன்னுத்துரை முன்பாக முற்படுத்தப்பட்டனர்.
இதில் 12 மீனவர்களுக்கு திருத்தப்பட்ட குற்றப்பத்திரிகையை மன்றில் தாக்கல் செய்வதற்கு கடற்றொழில் திணைக்கள அதிகாரிகள் அவகாசம் கோரினர். இதையடுத்து அவர்கள் எதிர்வரும் 28ஆம் திகதி வரை மறியலில் வைக்கப்பட்டனர். 11

## ஜனாதிபதித் தேர்தலில் தமிழ் பொது வேட்பாளர்!

### காலத்தின் கட்டாயம் என்கிறது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு

யாழ்ப்பாணம், டிசெ. 23
தேர்தல்களில் வெற்றிகொள்வதற்கு புலம்பெயர் தமிழர்களையும், வடக்கு - கிழக்கு தமிழர்களையும் பயன்படுத்திக்கொள்ள இனப்பிரச்னைக்கு தீர்வு காணப்படும் என ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்து வருகிறார் என்று சாடியுள்ள தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பேச்சாளர் க. சுரேஷ் பிறேமச்சந்திரன், சிங்கள அரசியல் தலைமைகளின் அசமந்தப் போக்கைச் சுட்டிக்காட்டக்கூடிய வகையில் தமிழ் மக்கள் ஜனாதிபதி தேர்தலில் ஒரு பொது வேட்பாளரை நிறுத்தி அவருக்கு வாக்களிக்க வேண்டியது காலத்தின் 11

## 'அஸ்வெசும' பயனாளர்களுக்கு 5,196 கோடி ரூபாய் அளிப்பு!

### நிதி இராஜாங்க அமைச்சர்



கொழும்பு, டிசெ. 23
'அஸ்வெசும' நலன்புரி திட்டம் ஆரம்பிக்கப்பட்டது முதல் பயனாளிகளுக்கு 5 ஆயிரத்து 196 கோடியே 70 இலட்சம் ரூபாய் வழங்கப்பட்டுள்ளது என்று நிதி இராஜாங்க அமைச்சர் ஷெஹான் சேமசிங்க தெரிவித்துள்ளார்.
அஸ்வெசும' பயனாளிகளின் டிசெம்பர் மாத கொடுப்பனவாக வங்கிகளுக்கு நிதி அமைச்சு 879 கோடியே 30 இலட்சம் ரூபாயை வழங்கியுள்ளது.
இந்தப் பணத்தை அஸ்வெசும நன்மை பெறும் 14 இலட்சத்து 10 ஆயிரத்து 64 குடும்பங்களின் வங்கி கணக்குகளில் வைப்பிலிடப்பட்டு வருகிறது என்றும் அவர் கூறினார். (ஐ)

# இப்படியும் நடக்கிறது

தேர்தல்களில் முக்கிய கட்சிகள் அல்லது கூட்டணிகளில் போட்டியிடுகின்ற வேட்பாளர்கள் விருப்பு வாக்குகளை பெறுவதற்காக முட்டிமோதுவதுண்டு.

ஒரு காலத்தில் மாற்றுக் கட்சி வேட்பாளர்களுக்கு எதிராக அரசியல் செய்கின்ற கலாசாரம் போய் தமது கட்சியில் போட்டியிடும் வேட்பாளர்களுக்கு எதிராகவே பிரசாரம் செய்யும் கலாசாரத்தை ஜே. ஆர். கொண்டுவந்த விகிதாசார தேர்தல் முறையும் விருப்பு வாக்கு முறையும் நமது நாட்டுக்கு அறிமுகம் செய்துவைத்தன.

அதனால்தான் ஒரே கட்சியைச் சேர்ந்த துமிந்த சில்வாவும், பாரத லக்ஷ்மன் பிரேமச்சந்திரவும் ஒருவரையொருவர் துப்பாக்கியால் சுட்டுக்கொள்ளும் அளவுக்கு மோதிக்கொண்டனர்.

விருப்பு வாக்கு என்பது அவர்கள் போட்டியிடும் கட்சிக்கு அல்லது கூட்டணிக்கு கிடைக்கின்ற வாக்குகளில் தாங்கள் எவ்வளவு வாக்குகளை விருப்பு வாக்குகளாகப் பெறுவது என்பதில் ஏற்படும் போட்டியே. அதற்காக இவர்களுக்கு விழுகின்ற விருப்பு வாக்குகள் எல்லாம் அவர்களுக்கான வாக்குகள் என்பதல்ல.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் போட்டியிட்ட போது பல ஆயிரம் விருப்பு வாக்குகளைப் பெற்ற சில தலைவர்கள் பின்னர் கூட்டமைப்பிலிருந்து வெளியே வந்தபின்னர் நான்கு இலக்க வாக்குகளையே அதாவது ஒரு சில ஆயிரங்களையே பெற்றதை கண்டிருக்கின்றோம்.

அதுபோலத்தான் தெற்கிலும் மொட்டு கட்சியில் போட்டியிட்டபோது அந்தக் கட்சிக்கு விழுந்த வாக்குகளில் தமக்கென விருப்பு வாக்குகளைப் பெற்று தொடர்ந்து எம். பியாக இருந்து வருபவர்கள் பலர். அவர்கள் மொட்டிலிருந்து வெளியே வந்து தேர்தலில் நின்றால் - காணாமலே போய்விடுவார்கள். அதிகம் ஏன், மகிந்தவின் கூட்டணியில் இருக்கின்ற லங்கா சமசமாஜ கட்சியின் தலைவரும் கம்யூனிஸ்ட் கட்சியின் தலைவரும் மகிந்த அணிக்கு கிடைக்கும் தேசியப் பட்டியல்மூலமே பல தசாப்தங்களாக எம். பி. ஆகிக் கொண்டிருக்கின்றனர்.

இவ்வாறு மகிந்தவின் வாக்குகளில் பல தேர்தல்களில் தொடர்ந்து எம். பி. ஆகிக் கொண்டிருந்த சிலர், 'அறகலய' போராட்டத்தின் பின்னர், இனி மகிந்த கட்சி தலையெடுக்க முடியாது என்ற நம்பிக்கையில் அதிலிருந்து வெளியேறி சுயாதீனமாக இயங்கி வருகின்றனர்.

அவ்வாறு இயங்கி வருபவர்களில் டலஸ் அழகப்பெரும, பேராசிரியர் ஜீ. எல். பீரிஸ், டிலான் பெரேரா போன்றவர்கள் முக்கியமானவர்கள். இவர்கள் பதின்மூன்று பேர் தற்போது சுதந்திர மக்கள் பேரவை என்ற பெயரில் இயங்கிவருகின்றனர். இந்த அணி தற்போது ஐக்கிய மக்கள் சக்தியுடன் இணைவதற்காக பேச்சு நடத்திவருவதாகவும், அந்த அணியை சேர்ந்த பேராசிரியர் ஜீ. எல். பீரிஸூக்கு பிரதமர் பதவியை வழங்க ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவர் சஜித் பிரேமதாஸ உடன்பட்டுவிட்டார் எனவும் ஒரு செய்தி வெளியாகி தெற்கில் அதிர்வலைகளை ஏற்படுத்தியிருக்கின்றது.

சுதந்திர மக்கள் பேரவையின் பிரதான முகமாக இதுவரை இருந்துவருபவர் டலஸ் அழகப்பெருமதான். ஆனால், அவருக்கு பிரதமர் பதவியை வழங்காமல் பேராசிரியர் பீரிஸூக்கு வழங்க சஜித் சம்மதம் தெரிவித்தது, அந்தக் கட்சிக்குள் சலசலப்பை ஏற்படுத்தியிருக்கின்றது. பாராளுமன்றம் ஜனாதிபதியை தெரிவுசெய்வதற்காக தேர்தலை நடத்தியபோது ஜனாதிபதி பதவிக்கு போட்டியிட்டவர் இந்த டலஸ். அவரையே சஜித் பிரேமதாஸவும் ஆதரித்தார்.

இப்போது அவரை ஓரம் கட்டிவிட்டு பேராசிரியரை முன்னிலைப்படுத்த முயற்சி செய்வதாகத் தெரிகின்றது.

இதனால் அந்தக் கட்சியே ஆட்டம் கண்டுவிடும் என்கிறார்கள் தெற்கில் விசயம் தெரிந்தவர்கள். அந்த அணியில், டலஸ் அழகப்பெரும மட்டுமே தனக்கென்று தனது மாவட்டத்திலாவது சிறிய வாக்கு வங்கியை வைத்திருப்பவர். மாத்தறை மாவட்டத்தில் தேர்தல் பிரசாரத்துக்காக இதுவரை ஒரு துண்டுப்பிரசுரத்தைக்கூட அச்சிட்டு செலவு செய்யாதவர் என்ற பெருமைக்குரியவர். ஆனாலும் அவர் மொட்டு கட்சியிலிருந்து வெளியே வந்தால் எப்படி மக்கள் அவரை ஏற்றுக்கொள்வார்கள் என்பது அடுத்த தேர்தலிலேயே தெரியவரும். அதேவேளை எந்தத் தேர்தலிலும் போட்டியிடாமல் தேசியப் பட்டியல் மூலமே தெரிவாகி வருபவர் பேராசிரியர் பீரிஸ். அப்படியிருக்கையில் அவருக்கு பிரதமர் பதவியை வழங்குவதற்கு சஜித் சம்மதம் தெரிவிக்கிறார் என்றால் அவரின் பலவீனத்தையே அது புலப்படுத்துகின்றது. அவரது கட்சியிலேயே பல மூத்த தலைவர்கள் இருக்கிறார்கள். ஹர்ஷ டி சில்வா போன்ற இளம் ஆளுமைமிக்க தலைவர்கள் இருக்கிறார்கள். அப்படியிருக்க, மொட்டிலிருந்து வெளியேறி இயங்கிக்கொண்டிருக்கும் பதின்மூன்று பேரை தன்னுடன் சேர்த்துக் கொள்வதற்காக இத்தனை பெரிய பேரம்பேசலில் இவர் ஈடுபடுகின்றார் என்றால், அவரது 'தன்னம்பிக்கையை' என்னவென்று சொல்வது?

- ஊர்க்குருவி.

# பிரபாகரனின் மகள் என்று கூறி உரையாற்றியவர் கைதாவார்!

## மக்கள் பாதுகாப்பு அமைச்சர்

கொழும்பு, டிசெ. 23

தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவரின் மகள் எனக் குறிப்பிட்டு பெண்ணொருவர் பேசுவதைப் போன்று காணொலியை வெளியிட்ட நபர்கள் விரைவில் கைது செய்யப்படுவர் என்று பொது மக்கள் பாதுகாப்பு அமைச்சர் டிரான் அலஸ் தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி ஊடக மையத்தில் நேற்றுமுன்தினம் நடந்த செய்தியாளர் மாநாட்டில் இதனைத் தெரிவித்த அவர் மேலும் குறிப்பிடுகையில்,

தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பின் தலைவரின் மகள் எனத் தெரிவிக்கப்பட்டு பெண்ணொருவர் பேசுவதைப் போன்று வெளியிடப்பட்ட காணொலி தொடர்பில் பொது மக்கள் பாதுகாப்பு அமைச்சு அவதானம் செலுத்தியுள்ளது.

அதற்கமைய அது தயாரிக்கப்பட்ட ஒரு காணொலி என்பது இனங்காணப்பட்டுள்ளது. அது தொடர்பில் பயங்கரவாத விசாரணைப்பிரிவு மற்றும் குற்றப்புலனாய்வு பிரிவு என்பன விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றன. இவ்வாறான காணொலிகளை வெளியிடுபவர்களை எவ்வாறேனும் இனங்கண்டு அவர்களை நிச்சயம் கைது செய்வோம் - என்றார். (ஐ)

# பொதுமக்களுக்கான அறுவுறுத்தல் எதனையும் நாம் வெளியிடவில்லை!

## பொலிஸ் ஊடகப் பேச்சாளர்

கொழும்பு, டிசெ. 23

தற்போதைய பொருளாதார நெருக்கடியை அடுத்து மக்களை எச்சரிக்கும் வகையிலான அறிவுறுத்தல்கள் எவற்றையும் தாம் வெளியிடவில்லை என பொலிஸ் ஊடகப் பேச்சாளர் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் நிஹால் தல்துவ தெரிவித்துள்ளார்.

தற்போதைய பொருளாதார நெருக்கடி காரணமாக மக்களை மிகவும் அவதானமாக இருக்குமாறு இலங்கை பொலிஸாரால் அறிவுறுத்தப்பட்டிருப்பதாகவும் அதற்கமைய சில விடயங்கள் வலியுறுத்தப்பட்டன என்றும் சமூக வலைத்தளங்களில் பதிவுகள் பரவுகின்றன.

இதுகுறித்து இலங்கைப் பத்திரிகை ஸ்தாபனத்தைத் தளமாகக்கொண்டு இயங்கிவரும் 'Fact Seeker' இனால் ஆராய்ந்து வெளியிடப்பட்டுள்ள தெளிவுபடுத்தலிலேயே மேற்கண்ட விடயம் குறிப்பிடப்பட்டுள்ளது.

பொலிஸாரால் வெளியிடப்பட்டிருப்பதாகப் பகிரப்பட்டுவந்த பதிவுகளில் "விலையுயர்ந்த கைகடிகாரங்களை அணியாதீர்கள், விலையுயர்ந்த மாலைகள், வளையல்கள், காதணிகளை அணியாதீர்கள், உங்கள் கைப்பைகள் தொடர்பில் கவனமாக இருங்கள், விலையுயர்ந்த செயின்கள் அணிவதைத் தவிர்க்க வேண்டும், உங்கள் விலை உயர்ந்த கைபேசிகளை பொது இடங்களில் பயன்படுத்தாதீர்கள், அந்நியர்களை காரில் அழைத்துச் செல்வதை தவிர்க்கவும், தேவைக்கு அதிகமான பணத்தை எடுத்துச் செல்ல வேண்டாம், நீங்கள் பயணம் செய்யும் போது உங்கள் ஏ. ரி. எம் மற்றும் கிரெடிட் கார்ட்களை பாதுகாப்பாக வைத்திருங்கள்" ஆகிய அறிவுறுத்தல்கள் உள்ளடங்கியிருந்தன.

இதுகுறித்து பொலிஸ் ஊடகப் பேச்சாளர் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் நிஹால் தல்துவவிடம் 'Fact Seeker' இனால் வினவப்பட்டபோது, இலங்கை பொலிஸ் திணைக்களத்தால் அவ்வாறான அறிவிப்பு எதுவும் வெளியிடப்படவில்லை என அவர் உறுதிப்படுத்தியுள்ளார். அதுமாத்திரமன்றி இந்த அறிவிப்பு சில மாதங்களுக்கு முன்னர் சமூக வலைதளங்கள் ஊடாகப் பகிரப்பட்டதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

# 2022இல் இலாபம் ஈட்டித் தந்த நிறுவனங்களுக்கே 'போனஸ்'!

## நிதி இராஜாங்க அமைச்சர் அறிவிப்பு

கொழும்பு, டிசெ. 23

2022 நிதியாண்டில் இலாபம் ஈட்டித் தந்த அரச நிறுவனங்களின் ஊழியர்களுக்கு மட்டுமே போனஸ் வழங்கப்படும் என்று நிதி இராஜாங்க அமைச்சர் ஷெஹான் சேமசிங்க அறிவித்துள்ளார்.

இலங்கையிலுள்ள வர்த்தக கூட்டுத்தாபனங்கள், சட்டபூர்வ சபைகள் மற்றும் அரசாங்கத்துக்கு சொந்தமான நிறுவனங்களின் ஊழியர்களுக்கான போனஸ் வழங்கும் செயல்முறை தொடர்பில் அவர் அறிவித்துள்ள விளக்கக் குறிப்பில்,

2022 இல் நிறுவனத்தின் நிதிச் செயல்பாட்டின் அடிப்படையில் போனஸ் கொடுப்பனவுகளுக்கு அரச ஊழியர்கள் தகுதி பெறுவார்கள். தகுதி பெற, ஒரு நிறுவனம் பின்வரும் நிபந்தனைகளை பூர்த்தி செய்ய வேண்டும்:

2022 நிதியாண்டில் இலாபம் ஈட்டியிருக்க வேண்டும். வரிக்குப் பிந்தைய இலாபத்தில் குறைந்தபட்சம் 30வீதம் ஒருங்கிணைந்த நிதியாக அரசாங்கத்தின் மத்திய திறைசேரிக்கு பகிர்ந்தளிக்கப்பட்டு இருக்க வேண்டும். இந்தத் தேவைகளில் ஒன்றை பூர்த்தி செய்யத் தவறிய அரச நிறுவனங்கள் இலாப பகிர்வு போனஸூக்குத் தகுதி பெறாது - என்றார்.

இவற்றுக்கு மேலதிகமாக 2022 நிதியாண்டில் நஷ்டம் ஏற்பட்ட எந்தவோர் அரச நிறுவனமும் செயல்முறையிலிருந்து விலக்கப்படும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ)

# பேசாலையில் பொலிஸார் நேற்று விசேட சோதனை!

மன்னார், டிசெ. 23

மன்னார் - பேசாலை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதிகளில் நேற்று வெள்ளிக்கிழமை காலை முதல் பொலிஸார் விசேட அதிரடிப்படையினர் மற்றும் இராணுவத்தினர் இணைந்து விசேட சுற்றிவளைப்பு சோதனைகளை முன்னெடுத்தனர்.

பேசாலை பொலிஸ் பிரிவில் உள்ள வீடுகளுக்குச் சென்ற பொலிஸார், விசேட அதிரடிப்படையினர் மற்றும் இராணுவத்தினர் போதைப்பொருள் சோதனை நடவடிக்கைகளையும் முன்னெடுத்தனர்.

பிரதி பொலிஸ்மா அதிபரின் பணிப்புரைக்கு அமைவாக நாட்டில் உள்ள அனைத்து மாகாணங்களிலும் போதைப்பொருள் சுற்றிவளைப்புக்கள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது. இந்நிலையிலேயே, பேசாலை பொலிஸ் பிரிவில் குறித்த சோதனை நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டன.

மேலும், போதைப்பொருள் வியாபாரத்தில் ஈடுபட்டு வருகின்றவர்கள் தொடர்பாகவும் விசாரணைகளை முன்னெடுத்து உள்ளதோடு சில போதைப்பொருட்களும் சோதனை நடவடிக்கையின் போது மீட்கப்பட்டுள்ளதாக தெரிய வருகிறது. (ஐ)

ஈழநாடு
Eelanadu ඊළනාඩු
23.12.2023 சனிக்கிழமை
சோபகிருது வருடம், மார்கழி 07

**"ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம் உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்"**
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com
தொலைபேசி : 021 205 2300

# பொதுவேட்பாளருக்கான இணக்கப்பாடு

தமிழ் மக்கள் கூட்டணியின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான சி. வி. விக்னேஸ்வரன் அனைத்து தமிழ் கட்சிகளும் இணைந்து அழைத்தால் ஜனாதிபதித் தேர்தலில் தமிழ் பொது வேட்பாளராக நிற்பதற்குத் தயாரென்று தெரிவித்திருக்கின்றார். 2024 ஜனாதிபதி தேர்தல் இலங்கையின் அரசியல் வரலாற்றில் ஒரு முக்கிய தேர்தலாக அமையப் போகின்றது. உள்நாட்டிலும் பிராந்தியத்திலும் சர்வதேசளவிலும் 2024 ஜனாதிபதி தேர்தல் கவனிப்பைப் பெறும் - ஏனெனில், ஒரு வங்குரோத்து நிலைக்குள் இலங்கை சிக்கியிருக்கின்ற சூழலில்தான் குறித்த தேர்தல் நடைபெறவுள்ளது.

இந்தத் தேர்தலில் ரணில் விக்கிரமசிங்கவே பிரதான பேசுபொருளாக இருக்கப் போகின்றார். இந்தப் பின்புலத்தில் அடுத்த ஆண்டின் ஆரம்பத்திலிருந்து தென்னிலங்கை அரசியல் பரபரப்படையப் போகின்றது. ரணில் விக்கிரமசிங்கவோ அல்லது இன்னொரு கவர்ச்சிமிக்க வேட்பாளரோ - எவராக இருந்தாலும் தனிக் கட்சியின் வழியாக தேர்தலை எதிர்கொள்ள முடியாது. நிச்சயமாக பொது வேட்பாளராகவே அவர் போட்டியிட வேண்டும். ஏனெனில், தனிக்கட்சி செல்வாக்குச் செலுத்தக்கூடிய நிலையில் தென்னிலங்கை அரசியல் இல்லை.

ரணில் விக்கிரமசிங்க ஒரு பொது வேட்பாளராக நின்றால் மட்டுமே அவரால் வெற்றிபெற முடியும். தற்போதுள்ள நிலையில் எந்தவொரு கட்சியின் வேட்பாளரும் ஐம்பது சதவீத வாக்குகளைப் பெறக்கூடிய நிலையில் இல்லை என்றே கணிப்புகள் கூறுகின்றன. இவ்வாறான கணிப்புகள் எவையும் முடிந்த முடிவுகள் அல்ல. எனினும், நிலைமைகள் சிக்கலாக இருக்கின்றது என்பது உண்மை. ஜே. வி. பியின் செல்வாக்கு முன்னரைவிடவும் அதிகரித்திருப்பதாகவும் கணிப்புகள் கூறுகின்றன.

இவ்வாறானதொரு நிலையில் தமிழ் மக்களின் வாக்குகளுக்கு ஒரு முக்கியமான பங்கு உண்டு. இந்தப் பங்கை தமிழ் மக்கள் எவ்வாறு கையாள்வது? வழமைபோல் யாராவது ஒரு தென்னிலங்கை வேட்பாளருக்கு வழங்கிவிட்டு, அவரை அரியணை ஏற்றுவதா - அல்லது தமிழ் மக்களின் அரசியல் தீர்வுக்கான பேரம் பேசும் ஆயுதமாக வாக்களிப்பைப் பயன்படுத்துவதா? 2005இல், தமிழ் மக்களின் தேர்தல் பங்குபற்றாமையின் மூலம் தென்னிலங்கை அரசியலை நெருக்கடிக்கு உள்ளாக்க முடியும் என்பது நிரூபிக்கப்பட்டது. ஆனால், அந்த நகர்வால் தமிழ் மக்களுக்கு எந்தவொரு நன்மையும் கிட்டவில்லை - மாறாக, சர்வதேச சமூகத்திலிருந்து விடுதலைப் புலிகள் முற்றிலும் தனிமைப்படவே அது பயன்பட்டது.

ஆனால், தற்போதுள்ள சூழலில் தமிழ் மக்களின் வாக்குகளை ஒரு திரட்சியாக்கி - அதன் மூலம் தமிழ் மக்களின் பேரம் பேசும் பலத்தை நிரூபிப்பதற்கான ஒரு வாய்ப்பாக இந்தத் தேர்தலை பயன்படுத்த முடியும். ஆனால், அதற்கு அனைத்து கட்சிகளும் ஒரு புள்ளியில் சந்திக்க வேண்டும். ஒரு கவர்ச்சிமிக்க வேட்பாளரை நிறுத்தி இந்த ஆட்டத்தை ஆட முடியும். விக்னேஸ்வரன் அதற்கு தகுதியானவர்தான். ஆனால், அவரை அனைவரும் ஏற்றுக்கொள்ளக்கூடிய நிலை இருக்குமா என்பது தொடர்பில் உரையாடப்பட வேண்டும். யார் அந்த வேட்பாளர் என்பதற்கு அப்பால், முதலில் அவ்வாறானதோர் இணக்கப்பாட்டுக்கு வர முடியுமா என்பது தொடர்பில் தமிழ் கட்சிகள் தங்களுக்குள் ஆராய வேண்டும். இது தொடர்பில் சிவில் சமூக மட்டத்தில் கலந்துரையாடல்கள் இடம்பெற வேண்டும்.

# இலங்கை - இந்திய ஒப்பந்த அமுலாக்க விடயத்தில் கூட்டமைப்பின் நிலைப்பாட்டை வரவேற்கிறோம்!

## ஈழமக்கள் ஜனநாயக கட்சி

*யாழ்ப்பாணம், டிசெ. 23*

ஈழ மக்கள் ஜனநாயக கட்சி நீண்டகாலமாக வலியுறுத்தி வந்த இலங்கை - இந்திய ஒப்பந்தத்தை முழுமையாக அமுல்படுத்தும் கோரிக்கையை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிடம் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வலியுறுத்தியுள்ளதை வரவேற்பதாக ஈழ மக்கள் ஜனநாயக கட்சியின் ஊடக பேச்சாளர் ஐயாத்துரை சிறீரங்கேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

யாழ். ஊடக அமையத்தில் நேற்று நடைபெற்ற ஊடக சந்திப்பின்போதே அவர் இவ்வாறு தெரிவித்திருந்தார்.

இவ்விடயம் தொடர்பில் அவர் மேலும் கூறுகையில் -

ஜனாதிபதி மற்றும் வடக்கு, கிழக்கை பிரதிநிதித்துவம் செய்யும் தமிழ் பாராளுமன்ற உறுப்பினர்களின் சந்திப்பில் இலங்கை - இந்திய ஒப்பந்தத்தை முழுமையாக நடைமுறைப் படுத்துமாறு தமிழ் தேசிய கூட்டமைப்பு விடுத்த கோரிக்கையை நாம் வரவேற்கிறோம்.

"ஆடிக்காற்றில் அம்மியும் பறக்கும்" என்ற போதும் - யுத்தம் வலுவான உச்ச நிலையில் இருந்தபோதும் நாம் இதனையே விடாப்பிடியாக வலியுறுத்தி வந்திருக்கின்றோம்.

ஐ. நா. மனித உரிமைகள் பேரவையும் 13 ஆவது திருத்தத்தை நடைமுறைப் படுத்துமாறே கூறியிருக்கின்றது. அரசியல் யாப்பில் உள்வாங்கப்பட்ட விடயமாக இருப்பதனால் இதனை நடைமுறைப்படுத்துவதில் தடையேதும் இருக்கப்போவதில்லை

ஆனால், தமிழ்த் தேசிய கூட்டமைப்பினரும் ஏனைய மிதவாத அரசியல் குழுக்களும் இலங்கை - இந்திய ஒப்பந்தத்தின் 13ஆவது அரசமைப்பை தும்புக்கட்டையால்கூட தொட்டுப் பார்க்க முடியாது என வீர முழக்கமிட்டனர்.

ஆனால் எமது தலைவர் டக்ளஸ் தேவானந்தா மிக நீண்ட அரசியல் பார்வையுடனும் தீர்க்கதரிசனமாகவும் துல்லியமான முறையில் இலங்கை - இந்திய ஒப்பந்தத்தை முழுமையாக நடைமுறைப்படுத்துவதுடன் 13 ஆவது அரசமைப்பை செயல்படுத்தி அதிலிருந்து மேலும் நாம் அதிகாரங்களை பெற்றுக் கொள்ள வேண்டும் என்பதில் மிக தெளிவாக இருந்தார்.

70 ஆண்டுகளுக்கு மேலான பழமைவாத மிதவாத கட்சிகளும் பெரும் சட்டத்தரணிகளை கொண்டு அரசியல் நுட்பங்களை அறிந்த தத்துவ வித்தகர்களும் உள்ளனர் எனக் கூறப்பட்ட தமிழ் தேசிய கூட்டமைப்பினரும் இதுவரைகாலமும் எந்தவிதமான அரசியல் தீர்வையோ அல்லது அரசியல் பொதியையோ முன்வைத்திருக்கவில்லை.

தன்னாட்சி, சுயநிர்ணயம், தேசியம் என பேசிக் கொண்டிருந் தார்களே தவிர தமிழ் மக்களுக்கான ஒரு தீர்வை தேடிக் கண்டுபிடிக்கவில்லை. அதற்கான திட்டமும் அவர்களிடம் இருந்திருக்கவில்லை. தேர்தல் அரசியலை மட்டுமே இலக்காகக் கொண்டு நாளொரு பொய்யும் பொழுதொரு புழுகுமாக வீறாப்பாகவும் ஆக்ரோசமாகவும் அறிக்கைவிட்டுக் கொண்டிருந்தனர்.

ஆனால், தற்போது ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சி 30 ஆண்டுகளுக்கு மேலாக வலியுறுத்திவந்த வழிமுறையை பின்பற்றிய கூட்டமைப்பு நேரடியாக ஜனாதிபதியிடம் தமது நிலைப்பாட்டை முற்படுத்தியுள்ளனர்.

கடந்தகாலங்களில் கடைத்த பல வாய்ப்புகளை தவறவிட்டது போன்றல்லாது இந்த வாய்ப்பையாவது பயன்படுத்தி வெளிப்படைத் தன்மையுடனும் இதயசுத்தியுடனும் தமிழ் தேசிய கூட்டமைப்பு பங்காற்றுமாயின் ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சி அதனை முழுமையாக வரவேற்கும் - என்றும் அவர் கூறினார்.

(ஐ)

# மலையக மக்கள் முன்னணியின் மாநாடும் நூல்கள் வெளியீடும்!

*நுவரெலியா, டிசெ. 23*


"200 இல் மாற்றத்தை நோக்கி..." என்ற தொனிப் பொருளில் மலையக மக்கள் முன்னணி மாநாட்டை நடத்துகிறது. நுவரெலியா சினிசிட்டா நகர மண்டபத்தில் நாளை ஞாயிற்றுக் கிழமை காலை 9 மணி முதல் நடைபெறும் இந்த மாநாட்டில் மலையக எழுத்தாளர்களின் ஆறு நூல்கள் வெளியீடு செய்யப்படவுள்ளன.

மலையக மக்கள் முன்னணி தலைவர் வே. இராதாகிருஷ்ணன் தலைமையில், தெளிவத்தை ஜோசப் எழுதிய 'தெளிவத்தை ஜோசப் கதைகள்', சாரல் நாடனின் 'வானம் சிவந்த நாட்கள்', மலையக ஆய்வாளர் மு. நித்தியானந்தனின் 'மலையக இலக்கியம்: சிறுமை கண்டு பொங்குதல்', 'மலையக சுடர்மணிகள்', மாத்தளை பெ. வடிவேலனின் 'வல்லமை தாராயோ?', மலரன்பனின் 'கொலுஷா' ஆகிய ஆறு நூல்கள் வெளியிட்டு வைக்கப்படவுள்ளன.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக சஜித் பிரேமதாஸ, விசேட அதிதிகளாக இந்திய பிரதி தூதுவர் சத்யன்ஜல் பான்டே, கண்டிக்கான இந்திய துணை தூதுவர் டாக்டர் எஸ். ஆதிரா சிறப்பு அதிதிகளாக பாராளுமன்ற உறுப்பினர்களான சி. சிறீதரன், ரிஷாத் பதியுதீன், வேலு குமார், ரவூப் ஹக்கீம், ம. உதயகுமார், பழனி திகாம்பரம், மனோ கணேசன், ரஞ்சித் மத்துமபண்டார ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

(ஐ)

# அப்புக்குட்டி அண்ணையின் 'டவுட்'



**டிசெம்பர் - 23 சனிக்கிழமை**
**சோபகிருது வருடம் - மார்கழி 07**
**நல்ல நேரம் : 07.30 - 09.00**
**ராகு காலம் : 09.00 - 10.30**
**திதி : துவாதசி**




**மேடம்**
ராசிக்குள் சந்திரன் இருப்பதால் ஒரே நாளில் முக்கியமான 4 அல்லது 5 வேலைகளை பார்க்க வேண்டிவரும். அலைச்சலும் மனக்கலக்கமும் அதிகரிக்கும். விழிப்புணர்வுடன் இருக்க வேண்டிய நாள்.

**இடபம்**
கணவன்-மனைவிக்குள் அனுசரித்துப் போவது நல்லது. வியாபாரத்தில் பாக்கிகளை நயமாகப் பேசி வசூலிக்கப்பாருங்கள். மறைமுக எதிர்ப்புகள் வந்து செல்லும். போராடி வெல்லும் நாள்.

**மிதுனம்**
ஆன்மிகப் பெரியோரின் ஆசி கிட்டும். பெற்றோரின் ஆதரவு பெருகும். வியாபாரத்தை பெருக்குவீர்கள். உத்தியோகத்தில் உங்களின் புதிய முயற்சிகள் பலிதமாகும். லாபம் பெரும் நாள்.

**கடகம்**
சொன்ன சொல்லைக் காப்பாற்றத் துடிப்புடன் செயல்படுவீர்கள். வியாபாரத்தில் பழைய வாடிக்கையாளர்கள் தேடி வருவார்கள். உத்தியோகத்தில் உங்கள் கை ஓங்கும். நன்மை நடக்கும்.

**சிம்மம்**
குடும்பத்தில் சந்தோஷம் நிலைக்கும். வியாபாரத்தில் நெளிவு சுளிவுகளை கற்றுக் கொள்வீர்கள். உத்தியோகத்தில் பணிகளை விரைந்து முடிப்பீர்கள். புத்துணர்ச்சி பெருகும் நாள்.

**கன்னி**
சந்திராஷ்டமம் நீடிப்பதால் சிக்கனமாக இருக்க வேண்டுமென்று நினைத்தாலும் அத்தியாவசிய செலவுகள் அதிகமாகும். மறைமுக விமர்சனங்கள் உண்டு. பொறுமை தேவைப்படும் நாள்.

**துலாம்**
தன் பலம் பலவீனத்தை உணர்வீர்கள். வியாபாரத்தில் எதிர்பார்த்த லாபம் வரும். உத்தியோகத்தில் சக ஊழியர்கள் ஆதரிப்பார்கள். எதிர்பாராத நன்மை கிட்டும் நாள்.

**விருட்சிகம்**
கனிவாகப் பேசி காரியம் சாதிப்பீர்கள். பணப்புழக்கம் அதிகரிக்கும். வியாபாரத்தில் அதிரடியான திட்டங்களை தீட்டுவீர்கள். சில நுணுக்கங்களை கற்றுக் கொள்வீர்கள். சந்திராஷ்டமம் நாள் இல்லை.

**தனுசு**
புதிய திட்டங்கள் நிறைவேறும். ஆடம்பர செலவுகளை குறைத்து சேமிக்கத் தொடங்குவீர்கள். உத்தியோகத்தில் திருப்தி உண்டாகும். கனவு நனவாகும் நாள்.

**மகரம்**
எதிர்ப்புகள் அடங்கும். தாய் வழி புதிய வாகனங்களை வாங்குவீர்கள். உத்தியோகத்தில் சக ஊழியர்கள் உங்கள் வேலைகளைப் பகிர்ந்துக்கொள்வார்கள். தேவைகள் பூர்த்தியாகும் நாள்.

**கும்பம்**
குடும்பத்தில் உங்கள் வார்த்தைக்கு மதிப்பு கூடும். வியாபாரத்தில் புது யுக்திகளை கையாளுவீர்கள். அதிகாரிகள் முக்கியத்துவம் தருவார்கள். மாறுபட்ட அணுகுமுறையால் முன்னேறும் நாள்.

**மீனம்**
கணவன்-மனைவிக்குள் அன்யோன்யம் பிறக்கும். வியாபாரத்தில் வேலையாட்களின் ஆதரவு கிட்டும். உத்தியோகத்தில் முக்கிய முடிவுகள் எடுப்பீர்கள். மனசாட்சிபடி செயல்படும் நாள்.

# கைதான இந்திய மீனவர்களை விடுவிக்க துரித நடவடிக்கை!

## மத்திய அரசு உயர்நீதிமன்றில் தெரிவிப்பு

**சென்னை, டிசெ. 23**

**இலங்கை கடற்படையினரால் கைது செய்யப்பட்டுள்ள தமிழக மீனவர்களை மீட்க துரித நடவடிக்கை எடுக்கப் பட்டு வருவதாக உயர் நீதிமன்றத்தில் மத்திய அரசு தெரிவித்துள்ளது.**

இலங்கை கடற்படையால் தமிழக மீனவர்கள் 31 பேர் கடந்த 9, 13 ஆகிய திகதிகளில் கைது செய்யப்பட்டனர். இவர்களை விடுவிக்க தூதரக ரீதியாக நடவடிக்கை எடுக்கக் கோரி மீனவர்கள் பாதுகாப்பு அமைப்பின் தலைவரான பீற்றர் ராயன் என்பவர் சென்னை உயர் நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்திருந்தார்.

'கச்சதீவை இலங்கைக்கு விட்டுக் கொடுத்து கடந்த 1974ஆம் ஆண்டு மேற்கொள்ளப்பட்ட ஒப்பந்தத்தில், பாக்கு நீரிணையில் இரு நாட்டு மீனவர்களுக்கும் மீன்பிடிக்க பாரம்பரிய உரிமை உள்ளதாக தெளிவாகக் கூறப்பட்டு உள்ளது.

ஆனால், கச்சதீவுக்கு செல்லும் தமிழக மீனவர்களை இலங்கை கடற்படை தொடர்ச்சியாக கைது செய்து வருகிறது. மீனவர்களின் படகுகளையும் பறிமுதல் செய்து வருகின்றனர். கடந்த 1983 முதல் 2013 வரை 111 தமிழக மீனவர்கள் இலங்கை கடற்படையினரால் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளனர். 439 பேர் படுகாயமடைந்தனர்.

எனவே, தற்போது இலங்கை கடற்படை வசம் உள்ள தமிழக மீனவர்களை மீட்க துரித நடவடிக்கை எடுக்க மத்திய, மாநில அரசுகளுக்கு உத்தரவிட வேண்டும்' என மனுவில் அவர் கோரியிருந்தார்.

இந்த வழக்கு தலைமை விசாரணைக்கு வந்தபோது, தமிழக மீனவர்களின் விடுதலைக்காக தூதரக அளவில் துரித நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாக மத்திய அரசு தரப்பிலும், பாதிக்கப்பட்டுள்ள மீனவர்களின் குடும்பத்துக்கு உரிய நிவாரணம் வழங்கப்படும் என தமிழக அரசு தரப்பிலும் தெரிவிக்கப்பட்டது. இதையடுத்து நீதிபதிகள் இந்த வழக்கை முடித்து வைத்து உத்தரவிட்டனர். (ஐ)

# பதவியிழந்த பொன்முடி முதலமைச்சருடன் சந்திப்பு

சென்னை, டிசெ. 23

வருமானத்துக்கு அதிகமாக சொத்து சேர்த்த குற்றத்துக்காக தண்டனை பெற்ற முன்னாள் அமைச்சர் பொன்முடி நேற்று முதலமைச்சர் மு. க. ஸ்டாலினை சந்தித்துப் பேசினார்.

2006 முதல் 2011 வரை திமுக ஆட்சிக் காலத்தில் உயர்கல்வித் துறை அமைச்சராக இருந்தபோது வருமானத்துக்கு அதிகமாக ஒரு கோடியே 72 இலட்சத்து 63 ஆயிரத்து 468 ரூபாய் சொத்து சேர்த்ததாக பொன்முடி அவரது மனைவி மீது அ. தி. மு. க. ஆட்சி காலத்தில் லஞ்ச ஒழிப்பு பொலிஸார் வழக்கு பதிந்தனர்.

இந்த வழக்கில் பொன்முடி, அவரின் மனைவி குற்றவாளிகள் என்று சென்னை உயர்நீதிமன்ம் தீர்ப்பளித்தது. மேலும், இருவருக்கும் தலா 3 ஆண்டுகள் சிறை தண்டனை விதித்தது. இதனை தொடர்ந்து பொன்முடி அமைச்சர் பதவியை இழந்தார். 3 ஆண்டுகள் சிறை தண்டனை விதிக்கப்பட்டபோதும் மேல்முறையீடு செய்ய 30 நாட்கள் அவகாசம் வழங்கப்பட்டுள்ளது.

இந்நிலையில், பொன்முடி நேற்று முதலமைச்சர் மு. க. ஸ்டாலினை சந்தித்தார். முதலமைச்சர் இல்லத்தில் இந்த சந்திப்பு நடைபெற்றது. அப்போது, வழக்கு தொடர்பாக உச்சநீதிமன்றத்தில் மேல்முறையீடு செய்வது உள்ளிட்ட விவகாரங்கள் குறித்து விவாதிக்கப்பட்டன என்று தகவல்கள் வெளியாகின. (ஐ)

# கூட்டணி பேச்சில் இருந்த முதல்வர் மத்திய அரசை குறைசொல்வதா?

## - நிதி அமைச்சர் நிர்மலா -



புதுடில்லி, டிசெ. 23

வெள்ளம் பாதித்தபோது முதல்வர் ஸ்டாலின் டில்லியில் கூட்டணி கட்சிகளுடன் ஆலோசனையில் ஈடுபட்டார். அப்படியிருக்கையில் மத்திய அரசை குறை கூறுவது நியாயமா' என மத்திய நிதியமைச்சர் நிர்மலா சீதாராமன் கேள்வி எழுப்பினார்.

மத்திய நிதியமைச்சர் நிர்மலா சீதாராமன் செய்தியாளர்களுக்கு அளித்த போது,

2015 வெள்ளத்தின் போது நான் அம்பத்தூரில் ஆய்வு செய்தேன். 2015ல் வெள்ளத்தில் பாடம் கற்றிருந்தால், தற்போது அம்பத்தூரில் வெள்ளநீர் தேங்கியிருக்காது. அந்த வெள்ளத்தில் தமிழக அரசு கற்றுக் கொண்டது என்ன? மழை பாதிப்பின்போது முதல்வர் ஸ்டாலின் டில்லியில் கூட்டணி கட்சிகளுடன் ஆலோசனையில் ஈடுபட்டார். தமிழக முதல்வர் எதற்கு முக்கியத்துவம் கொடுக்கிறார் என்பது இதன்மூலம் தெளிவாக தெரியும்.

கூட்டணி கூட்டத்தை முடித்தபின் இரவில் பிரதமரை சந்திப்பதாக முதல்வர் கூறினார். அதன்படி, போகிறபோக்கில் சாவகாசமாக இரவில் பிரதமர் மோடியை சந்தித்தார். வெள்ளத்தின்போது டில்லியில் இருந்துகொண்டு மத்திய அரசை குறை கூறுவது நியாயமா? நாங்கள் செய்ய வேண்டியதை செய்துகொண்டே இருக்கிறோம் - குறையே சொல்வதில்லை.

இது உன் அப்பன்வீட்டு காசா என முதல்வரின் குடும்பத்தை சேர்ந்த அமைச்சர் உதயநிதி பேசுகிறார். அவர் இருக்கும் பதவி உட்பட எல்லாம் அவரது அப்பா வீட்டு காசா என கேட்க முடியுமா? இது என்ன மாதிரியான பாஷை? இந்த மாதிரியான பேச்சுகள் அரசியலில் நல்லதல்ல. பொறுப்பில் இருப்பவர்கள் பொறுப்புடன் பேச வேண்டும். அவரின் தாத்தா எவ்வளவு பெரிய தமிழறிஞர் ? நாக்கில் பதவிக்கு ஏற்ற அளவுக்கு வார்த்தைகள் அளந்து வர வேண்டும் - என்றார். (ஐ)

# யாழில் கன மழையினால் 2033 குடும்பங்கள் பாதிப்பு

## அனர்த்த முகாமைத்துவ பிரிவு தகவல்

யாழ்ப்பாணம், டிசெ. 23

**யாழ்ப்பாண மாவட்டத்தில் கடந்த சில தினங்களாக பெய்து வரும் மழை காரணமாக, கடந்த வியாழக்கிழமை மாலை வரையில், 2,033 குடும்பங்களைச் சேர்ந்த 6,738 பேர் பாதிக்கப்பட்டுள்ளதுடன் 40 வீடுகள் பகுதியளவில் சேதமடைந்துள்ளதாக யாழ்ப்பாண மாவட்ட அனர்த்த முகாமைத்துவ பிரிவின் உதவிப் பணிப்பாளர் ரி.என்.சூரியராஜா தெரிவித்தார்.**

சங்கானை பிரதேச செயலர் பிரிவில் 783 குடும்பங்களைச் சேர்ந்த 2683 பேரும், கோப்பாய் பிரதேச செயலர் பிரிவில் 320 குடும்பங்களைச் சேர்ந்த 974 பேரும், ஊர்காவற்துறை பிரதேச செயலாளர் பிரிவில் 310 குடும்பங்களைச் சேர்ந்த 940 பேரும், பருத்தித்துறை பிரதேச செயலர் பிரிவில் 212 குடும்பங்களைச் சேர்ந்த 712 பேரும், தெல்லிப்பளை பிரதேச செயலாளர் பிரிவில் 117 குடும்பங்களை சேர்ந்த 439 பேரும் பாதிக்கப்பட்டுள்ளனர் என அவர் மேலும் கூறினார்.

(அ)

# 21,953 விபத்துக்களில் 2,163 பேர் உயிரிழப்பு!

கொழும்பு, டிசெ. 23

இவ்வருடத்தின் இதுவரையான காலப்பகுதியில் 21,953 வீதி விபத்துக்கள் பதிவாகியுள்ளதுடன், 2,163 பேர் உயிரிழந்துள்ளதாக பொலிஸ் போக்குவரத்துப் பிரிவின் பணிப்பாளர் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் மனோஜ் ரணகல தெரிவித்தார்.

மேலும், இந்த விபத்துக்களில் 5,206 பேர் படுகாயமடைந்துள்ளதாகவும், காயமடைந்தவர்களில் பெரும்பாலானோர் நிரந்தரமாகவோ அல்லது பகுதியாகவோ ஊனமுற்றார்கள் எனவும் பணிப்பாளர் சுட்டிக்காட்டினார்.

நேற்று முன் தினம் வியாழக்கிழமை நடைபெற்ற இலங்கை மருத்துவ சங்கத்தின் வீதி பாதுகாப்பு நிபுணர் குழுவின் ஊடக வியலாளர் மாநாட்டிலேயே அவர் இந்தத் தகவலை வெளியிட்டார்.

மேலும், கருத்து தெரிவித்த சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர், டிசெம்பர் மாதம் மற்றும் ஜனவரி முதல் வாரங்களில் அதிகளவு வீதி விபத்துக்கள் பதிவாகி வருவதாகவும், இதற்கு மதுபோதையில் வாகனம் செலுத்துவதே பிரதான காரணம் என அடையாளம் காணப்பட்டுள்ளதாகவும் கூறினார்.

(அ)



# ஜனாதிபதியை சந்தித்தார் புதிய இந்தியத் தூதுவர் ஜா

கொழும்பு, டிசெ. 23

இலங்கைக்கான இந்திய தூதுவர் சந்தோஷ் ஜா நேற்று வெள்ளிக்கிழமை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிடம் நற்சான்றுப் பத்திரத்தை வழங்கினார். இந்த நிகழ்வு ஜனாதிபதி செயலகத்தில் நேற்று இடம்பெற்றது.

ஜூலை 2019 முதல் ஜூலை 2020 வரை உஸ்பெகிஸ்தானில் இந்தியத் தூதராக சந்தோஷ் ஜா பணியாற்றினார். ஜூலை 2017 முதல் ஜூன் 2019 வரை, வொஷிங்டன் டிசியில் உள்ள இந்தியத் தூதரகத்தில் தனிப்பட்ட தூதராகப் பணிபுரிந்தார்.

2010 முதல் 2013 வரை பிரஸ்ஸல்ஸில் உள்ள இந்திய தூதரகத்தில் துணைத் தூதராகவும் பணியாற்றியமை குறிப்பிடத்தக்கது.

(அ)

# போதகருக்கு விளக்கமறியல்!

கொழும்பு, டிசெ. 23

கிருலப்பனையில் உள்ள விடுதி ஒன்றில் வைத்து போதகர் ஒருவரால் பாலியல் வன்கொடுமைக்கு ஆளானதாக கூறப்படும் 9 சிறுமிகளை அவர்களது பெற்றோர் அல்லது தகுந்த பாதுகாவலரிடம் ஒப்படைக்குமாறு கொழும்பு மேலதிக நீதவான் மொஹமட் ரிஸ்வான் உத்தரவிட்டுள்ளார்.

கிருலப்பனை பொலிஸாரும், பிரதேசத்தின் நன்னடத்தை அதிகாரியும் நீதிமன்றில் முன்வைத்த சமர்ப்பணங்களை கருத்திற்கொண்டு, பாலியல் வன்கொடுமைக்கு உள்ளான 9 சிறுமிகளும் பொலிஸாரால் நீதிமன்றில் முன்னிலைப்படுத்தப்பட்டனர்.

சிறுமிகளை துஷ்பிரயோகம் செய்ததாக கூறப்படும் போதகர் ஸ்கைப் தொழில்நுட்பம் மூலம் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டதுடன், அவரை எதிர்வரும் ஜனவரி மாதம் 3 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதவான் உத்தரவிட்டுள்ளார்.

11 வயதுக்கும் 18 வயதுக்கும் இடைப்பட்ட 9 சிறுமிகள் இவ்வாறு துஷ்பிரயோகத்திற்கு உட்படுத்தப்பட்டுள்ளதாகவும், அந்த சிறுமிகள் மூன்று குடும்பங்களின் சகோதரிகள் எனவும் பொலிஸார் நீதிமன்றில் தெரிவித்தனர்.

விடுதியின் போதகர் தம்மை துஷ்பிரயோகம் செய்வதாக சிறுமிகள் தாம் கல்வி கற்கும் பாடசாலையின் அதிபரிடம் கூறியுள்ளனர். இதனை அடுத்து அதிபர் கிருலப்பனை பொலிஸாருக்கு அறிவித்ததையடுத்து பொலிஸ் குழுவொன்று விடுதிக்கு சென்று குறித்த சிறுமிகளிடம் வாக்குமூலமொன்றை பெற்றுள்ளதாக பொலிஸார் நீதிமன்றிற்கு அறிவித்துள்ளனர்.

போதகரால் துஷ்பிரயோகம் செய்யப்பட்டதாக 9 சிறுமிகள் பொலிஸில் முறைப்பாடு செய்ததை அடுத்து சந்தேகநபர் கைது செய்யப்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர்.

கைது செய்யப்பட்ட சந்தேகநபர் தனது தொலைபேசியில் ஆபாச வீடியோக்களை காட்டி சிறுமிகளை துஷ்பிரயோகம் செய்துள்ளதாகவும் பொலிஸார் நீதிமன்றில் அறிவித்துள்ளனர்.

தெஹிவளை பிரதேசத்தில் உள்ள செஞ்சுரி தேவாலயத்தின் போதகரான சைரஸ் மோகன் ஜோசப் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளதாகவும், சிறுமிகள் தங்க வைக்கப்பட்டிருந்த விடுதி தெஹிவளையிலுள்ள தேவாலயத்துடன் இணைந்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

(அ)

# விவசாய நவீனமயமாக்கல் திட்டத்தை செயல்படுத்தி வெற்றிகரமான பிரதிபலன்களைப் பெறவேண்டும்!

## ஜனாதிபதியின் செயலாளர் அதிகாரிகளுக்கு அறிவுறுத்தல்

கொழும்பு, டிசெ. 23

இதுவரை இருந்த விவசாய வேலைத்திட்டங்களை போன்று இடைநடுவில் நிறுத்தாது, விவசாய நவீனமயமாக்கல் வேலைத்திட்டத்தை நடைமுறைப்படுத்தி, பிரதிபலன்களை காண்பிக்க தேவையான வழிகாட்டுதல்களை வழங்குமாறு ஜனாதிபதியின் செயலாளர் சமன் ஏக்கநாயக்க உரிய அதிகாரிகளுக்கு பணிப்புரை விடுத்துள்ளார்.

மேலும், இத்திட்டத்தை நடைமுறைப்படுத்தும்போது ஏற்படும் பிரச்சினைகளை துறைசார் நிறுவனங்களுடன் தொடர்புகொண்டு உடனடியாக தீர்க்க நடவடிக்கை எடுக்குமாறும் அவர் தெரிவித்தார்.

ஜனாதிபதி அலுவலகத்தில் நேற்று முன் தினம் நடைபெற்ற விவசாயத்தை நவீனமாக்கல் தொடர்பாக அதிகாரிகளுக்கு விளக்கமளிக்கும் கூட்டத்தில் ஜனாதிபதியின் செயலாளர் சமன் ஏக்கநாயக்க இந்த பணிப்புரைகளை வழங்கினார்.

மாகாண தலைவர்கள், மாவட்ட தலைவர்கள் மற்றும் இந்த வேலைத்திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்காக தெரிவு செய்யப்பட்ட 26 பிரதேச செயலாளர் பிரிவுகளின் தலைவர்கள் இந்தக் கூட்டத்துக்கு அழைக்கப்பட்டிருந்தனர்.

விவசாய நவீனமயமாக்கல் வேலைத்திட்டம் தொடர்பில் தேசிய ரீதியில் தீர்மானங்களை எடுப்பதற்காக ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவின் தலைமையில், பிரதமர், உரிய அமைச்சுகளின் செயலாளர்கள் மற்றும் 9 மாகாணங்களின் பிரதம செயலாளர்கள் உள்ளடக்கிய வகையில் நிறுவப்பட்டுள்ள குழுவுக்கு மேலதிகமாக விவசாய நவீனமயமாக்கல் செயலகம் ஒன்றை அமைக்கத் தீர்மானிக்கப்பட்டது.

விவசாய நவீனமயமாக்கல் அறிவு மற்றும் சேவைகளுக்கான மையமாக இந்த செயலகம் செயற்படவுள்ளது.

ஜனாதிபதியின் பணிப்புரைக்கமைய, இந்த வேலைத்திட்டத்துக்கு தனியார் துறையினரின் பங்களிப்பை பெறுவதற்குத் தேவையான சட்ட வரைவுகள் தயாரிக்கப்பட்டு வருவதாகவும் வலியுறுத்தப்பட்டது.

அதேபோன்று, விவசாய நவீனமயமாக்கலுக்கு 8 பிரதான அமைச்சுகள் பயன்படுத்தப்படவுள்ளதாகவும், 08 திணைக்களங்களின் ஆதரவுடன் தெரிவு செய்யப்பட்ட 26 பிரதேச செயலகங்களில் இந்த வேலைத்திட்டம் நடைமுறைப்படுத்தப்படவுள்ளதாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

இக்கலந்துரையாடலில் இணைந்துகொண்ட சிரேஷ்ட பேராசிரியர் காமினி சேனாநாயக்க, இலங்கை தற்போது எதிர்நோக்கும் விவசாய சிக்கல்கள் தொடர்பிலும் விசேட உரை ஒன்றை நிகழ்த்தினார்.

2024ஆம் ஆண்டு விவசாய உற்பத்தித் திறனை அதிகரிக்க ஜனாதிபதி செயலகத்தின் ஊடாக தேவையான ஒதுக்கீடுகள் வழங்கப்பட்டுள்ளதுடன், அந்த செயற்பாட்டுடன் மாத்திரம் நின்றுவிடாது விவசாயத்துறையில் ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டில் கவனம் செலுத்துமாறு பொருளாதார விவகாரங்களுக்கான ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகர் கலாநிதி ஆர்.எச். சமரதுங்க தனது உரையில் தெரிவித்தார்.

(அ)

# 9ஆவது நாளாகத் தொடர்கிறது ரெலிகொம் ஊழியர் போராட்டம்

கொழும்பு, டிசெ. 23

சிறிலங்கா ரெலிகொம் ஊழியர்கள் ஆரம்பித்துள்ள பணிப்புறக்கணிப்புப் போராட்டமானது நேற்று வெள்ளிக்கிழமையும் 9 ஆவது நாளாக தொடர்ந்தது.

சிறிலங்கா ரெலிகொம் நிறுவனத்தை தனியார் மயமாக்குவதற்கு எதிர்ப்புத் தெரிவித்தே போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

நேற்று முன் தினம் கூடிய பணிப்பாளர் சபை தமது கோரிக்கைகள் தொடர்பில் ஏற்றுக்கொள்ளக் கூடிய தீர்வை வழங்கவில்லை என இலங்கை அனைத்து தொலைத்தொடர்பு ஊழியர் சங்கத்தின் தலைவர் ஜகத் குருசிங்க தெரிவித்தார்.

இதேவேளை, யாழ்ப்பாணத்திலும் சிறிலங்கா ரெலிகொம் அலுவலகத்துக்கு முன்பாக நேற்று பணிப்புறக்கணிப்புப் போராட்டம் இடம்பெற்றது.



பணிப்புறக்கணிப்புப் போராட்டத்தில் ஈடுபட்டவர்கள், "இலாபம் ஈட்டும் தொலைத்தொடர்பு நிறுவனத்தை தனியார்மயமாக்குவதை நிறுத்து, தேசிய வளங்களை விற்பதை நிறுத்து, பொருளாதாரத்தை மேம்படுத்துவதாகக் கூறி நாட்டின் வளங்களை விற்பனை செய்வதற்கு இடமளிக்க முடியாது போன்ற வாசகங்கள் அடங்கிய பதாகைகளை ஏந்தியவாறு அரசுக்கு எதிராக கோஷமிட்டு பணிப்புறக்கணிப்பு போராட்டத்தில் ஈடுபட்டமை குறிப்பிடத்தக்கது.

(அ)

# புதிய ஒரு நாடகத்தை அரங்கேற்கும் மகிந்த!

**சாடுகின்றார் சஜித் பிரேமதாஸ**

கொழும்பு, டிசெ. 23

**"நாட்டின் வாழ்வாதாரம் சீர்குலைந்து, பொருளாதாரம் வங்குரோத்தாகியுள்ள இந்நேரத்தில், சில தரப்பினர் ஏமாற்று அரசியல் நாடகங்களை அரங்கேற்றி வருகின்றனர்." - என்று எதிர்க்கட்சி தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.**



வரவு செலவுத் திட்டத்திற்கும், வற் வரியை அதிகரிப்பதற்கும் ஆதரவாக வாக்களித்து விட்டு, ஜனாதிபதியை பாதுகாத்துக் கொண்டும், வரிச் சுமையை மக்களின் தோள்களில் சுமத்த வேண்டாம் என மகிந்த ராஜபக்ஷ அறிக்கைகளை வெளியிடுது பெரும் நகைச்சுவையான விடயம் என்றும் அவர் தெரிவித்தார்.

"வற் வரியை அதிகரிப்பதற்கான பிரேரணை பாராளுமன்றத்தில் கொண்டு வரப்பட்டபோது நாட்டை வங்குரோத்தடையச் செய்த குடும்ப ஆட்சியின் ஒரு தரப்பினர் அதற்கு வாக்களிக்காமல், மக்கள் பக்கம் நிற்பதாக பாசாங்கு செய்தனர்.

நாட்டையே வங்குரோத் தாக்கி, நாசமாக்கிய இவர்கள், ஏமாற்றுத் தனமான செயற்பாடுகள் மூலம் மக்கள் அவதானங்களை திசை திருப்ப மீண்டும் முயற்சித்து வருகின்றனர், இவர்களின் இந்த போலியான செயற்பாடுகளை கண்டு ஏமாறக்கூடாது எனவும் சஜித் குறிப்பிட்டார்.

(அ)

போதைப்பொருள் விநியோகம்

# கட்சி அமைப்பாளரை விரட்டியது சஜித் அணி!



கொழும்பு, டிசெ. 23

போதைப்பொருள் விநியோகத்தில் ஈடுபட்டார் என்ற குற்றச்சாட்டின் அடிப்படையில் கைது செய்யப்பட்டுள்ள ஐக்கிய மக்கள் சக்தியின் குருணாகல் மாவட்ட அமைப்பாளர் அமித பண்டார, அக்கட்சியின் உறுப்புரிமையில் இருந்து நீக்கப்பட்டார்.

ஐக்கிய மக்கள் சக்தியின் பொதுச்செயலாளர் ரஞ்சித் மத்தும பண்டார விடுத்துள்ள அறிக்கையொன்றில் இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

குருநாகல் மற்றும் கேகாலை மாவட்டங்களில் போதைப்பொருள் விநியோகத்தில் ஈடுபட்ட குற்றச்சாட்டில் ஐக்கிய மக்கள் சக்தியின் குருநாகல் மாவட்ட அமைப்பாளர் அமித பண்டார பொலிஸாரினால் நேற்று கைது செய்யப்பட்டார்.

இதனையடுத்து, அவரை கட்சியின் உறுப்புரிமையில் இருந்தும், பதவியில் இருந்தும் நீக்குவதற்கு ஆலோசிக்கப்பட்டுள்ளதாக ரஞ்சித் மத்தும பண்டார குறிப்பிட்டுள்ளார்.

(அ)

# வவுனியாவில் குளத்தில் யுவதியின் சடலம் மீட்பு!

வவுனியா, டிசெ. 23

வவுனியா, பாவற்குளத்தில் உயிருக்கு போராடிய யுவதி மீட்கப்பட்டு வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டபோதும் அவர் உயிரிழந்தார்.

நேற்று முன்தினம் மாலை இந்த சம்பவம் நடந்தது.

பாவற்குளத்தில் யுவதியொருவர் தத்தளிப்பதை அவதானித்த பிரதேசவாசிகள், அவரை மீட்டு வைத்தியசாலைக்கு கொண்டு சென்றனர். எனினும், அவர் வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டபோது உயிரிழந்திருந்தார்.

நாக இலுப்பைக்குளத்தை சேர்ந்த 17 வயதான ஜான்சிகா என்ற பெண்ணே உயிரிழந்திருந்தார்.

இந்த யுவதி ஆடைத்தொழிற்சாலையில் பணிபுரிபவர். நேற்று மாலை ஆடைத்தொழிற்சாலை பேருந்தில் வீடு திரும்பும் போது, பாவற்குளத்தில் இறங்கியுள்ளார்.

அவர் தவறுதலாக பாவற்குளத்தில் விழுந்தாரா அல்லது தற்கொலை செய்தாரா என்பது தொடர்பில் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர்.

(அ)

# அமைச்சுகளுக்கு புதிய செயலாளர்கள் 2 மாகாணங்களுக்கு பிரதம செயலர்கள்

**நேற்று நியமித்தார் ஜனாதிபதி ரணில்**

கொழும்பு, டிசெ. 23

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, அமைச்சுக்களுக்கான புதிய செயலாளர்களை நியமித்துள்ளார்.

எதிர்வரும் ஜனவரி முதலாம் திகதி முதல் அமுலாகும் வகையில் இந்த நியமனம் வழங்கப்பட்டுள்ளதாக ஜனாதிபதி ஊடக பிரிவு தெரிவித்துள்ளது.

இதற்கமைய. கல்வி அமைச்சின் செயலாளராக வசந்த பெரேரா நியமிக்கப்பட்டுள்ளார்

நீதி, சிறைச்சாலைகள் மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சின் செயலாளராக முன்னாள் கல்வி அமைச்சின் செயலாளர் எம்.என்.ரணசிங்க நியமிக்கப்பட்டுள்ளார்

வனஜீவராசிகள் மற்றும் வன வளங்கள் பாதுகாப்பு அமைச்சின் செயலாளராக குணதாச சமரசிங்க நியமிக்கப்பட்டுள்ளார்.

இதனைத் தொடர்ந்து நீர் வழங்கல் மற்றும் தோட்ட உட்கட்டமைப்பு அமைச்சின் செயலாளராக ஏ.சி. மொஹமட் நபீல் நியமிக்கப்பட்டுள்ளார்.

டபிள்யூ.பி.பி. யசரத்ன பொது நிர்வாகம், உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சின் செயலாளராக நியமிக்கப்பட்டுள்ளார்.

நீர்ப்பாசன அமைச்சின் செயலாளராக சமன் தர்ஷன பண்டிகோரள நியமிக்கப்பட்டுள்ளார்.

அதேநேரம், சுற்றாடல் அமைச்சின் செயலாளராக பி.கே.பி.சந்திரகீர்த்தி நியமிக்கப்பட்டார்.

மின்சக்தி மற்றும் எரிசக்தி அமைச்சின் செயலாளராக கலாநிதி சுலக்ஷன ஜயவர்தன நியமிக்கப்பட்டார்.

போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சின் செயலாளராக பொறியியலாளர் ரஞ்சித் ரூபசிங்க நியமிக்கப்பட்டுள்ளார்.

கலாநிதி தர்ம ஸ்ரீ குமாரதுங்க தொழில்நுட்ப அமைச்சின் செயலாளராக நியமிக்கப்பட்டார்.

அத்துடன் இரண்டு புதிய பிரதம செயலாளர்களையும் ஜனாதிபதி நியமித்துள்ளார்.

வடமத்திய மாகாணத்தின் பிரதம செயலாளராக ஆர்.எம்.டபிள்யூ.எஸ்.சமரதிவாகரவும் மேல் மாகாண பிரதம செயலாளராக எஸ்.எல்.டி.கே.விஜேசிங்கவும் நியமிக்கப்பட்டுள்ளனர்.

(அ)

# போலியாக கடவுச்சீட்டு தயாரித்து விநியோகித்த இளைஞர்கள் கைது!

கொழும்பு, டிசெ. 23

குருநாகல் மாவட்டம் பன்னல பிரதேசத்தில் நீண்டகாலமாக போலி கடவுச்சீட்டு தயாரிப்பில் ஈடுபட்டுவந்த இளைஞர்கள் இருவர் பொலிஸரால் கைது செய்யப்பட்டுள்ளதுடன் அவர்களிடம் இருந்து 24 கடவுச் சீட்டுக்களும் கைப்பற்றப்பட்டுள்ளன.

பொலிஸ் விசேட அதிரடிப் படையினர் வழங்கிய தகவலுக்கு அமைய குறித்த கைது நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர்.

கைதானவர்கள் அதே பகுதியைச் சேர்ந்த 22, 23 வயதுகளை உடைய இளைஞர்கள் என்றும் அவர்களிடமிருந்து 03 மடிக்கணினிகள், பிறிண்டர்கள் 08, தொலைபேசிகள் 02, கடவுச்சீட்டுக்கள் 24, மற்றும் ஆவணங்களும் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளன.

கைதானவர்கள் நீண்ட காலமாக குறித்த சட்டவிரோத நடவடிக்கையில் ஈடுபட்டிருந்ததாக பொலிஸார் தெரிவித்தனர்.

(அ)

# பல்கலைக்கழகங்களுக்கு தகுதி பெற்ற மாணவர்களிடம் விண்ணப்பம் கோரல்!

கொழும்பு, டிசெ. 23

இந்த ஆண்டு இடம்பெற்ற கல்விப் பொதுத்தராதர உயர்தரப்பரீட்சையின் மீள்திருத்த பெறுபேறுகளின் அடிப்படையில், பல்கலைக்கழகங்களுக்கு தகுதிப்பெற்ற மாணவர்களிடம் இருந்து விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

இதன்படி, மாணவர்கள் எதிர்வரும் 29 ஆம் திகதி வரை அதற்கான விண்ணப்பங்களை சமர்ப்பிக்க முடியும் என பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

விண்ணப்பங்களை சமர்ப்பிப்பது தொடர்பான மேலதிக தகவல்களை பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் உத்தியோகப்பூர்வ இணையத்தளத்தில் பார்வையிட முடியும் என அந்த ஆணைக்குழு குறிப்பிடப்பட்டுள்ளது.

(அ)

# அமைச்சர் டிரான் அலஸ்க்கு வெளிநாட்டிலிருந்து மிரட்டல்

கொழும்பு, டிசெ. 23

பாதாள உலக நபர் ஒருவர் பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் டிரான் அலஸுக்கு தொலைபேசியில் அச்சுறுத்தல் விடுத்துள்ளார்.

'நிலையான நாட்டுக்குச் செல்வோம்' என்ற தொனிப் பொருளில் ஜனாதிபதி அலுவலகத்தில் நேற்று முன் தினம் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் தேநீர் விருந்துக்காக விருந்தினர் அறைக்கு டிரான் அலஸ் சென்றபோது இந்த தொலைபேசி அழைப்பு வந்ததாக பொது பாதுகாப்பு அமைச்சு தெரிவித்துள்ளது.

வெளிநாட்டிலிருந்து வந்த இந்த தொலைபேசி அழைப்பின் மூலம் அமைச்சரை ஏழு நாட்களுக்குள் பார்த்துக் கொள்வதாக மிரட்டல் விடுக்கப்பட்டதாக கூறப்பட்டது.

(அ)

# பெரமுனவின் செயற்குழுவில் கீதநாத்

கொழும்பு, டிசெ. 23

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் ஒருங்கிணைப்புச் செயலாளரான கீதநாத் காசிலிங்கம், பொதுஜன பெரமுனவின் செயற்குழு மற்றும் அரசியல் பேரவை ஆகியவற்றுக்கு உறுப்பினராக நியமிக்கப்பட்டுள்ளார்.

அண்மையில் இடம்பெற்ற கட்சி உறுப்பினர்களின் மறுசீரமைப்பின்போது அவர் இந்த குழுக்களின் உறுப்பினராக நியமிக்கப்பட்டுள்ளார்.

கீதநாத் காசிலிங்கம் பொதுஜன பெரமுனவின் இரண்டு குழுக்களுக்கும் நியமிக்கப்பட்டுள்ள தமிழ் பிரதிநிதி என்ற நிலையில், குறிப்பாக வடக்கு மற்றும் கிழக்கில் தமிழ் சமூகம் மத்தியில் கட்சியின் கொள்கைகளை வலுப்படுத்துவது தொடர்பில் செயற்படுவார் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

கீதநாத் காசிலிங்கம் இதற்கு முன்னர் மகிந்த ராஜபக்ஷ பிரதமராக இருந்த போது வடக்கு மற்றும் கிழக்கில் புனர்வாழ்வு விவகாரங்களுக்கான பிரதமரின் விசேட பிரதிநிதியாக செயற்பட்டார்.

இந்நிலையில் பொதுஜன பெரமுனவின் செயற்குழு மற்றும் அரசியல் பேரவைக்கு நியமிக்கப்பட்ட இளம் உறுப்பினர்களில் இவரும் ஒருவர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

(அ)

# இஸ்ரேல் மீது ஹமாஸ் தாக்குதல் பின்புலத்தில் ரஷ்யா இருக்கலாம்!

## விமலுக்கு வந்தது சந்தேகம்

கொழும்பு, டிசெ. 23

இஸ்ரேலில் ஹமாஸ் தாக்குல் நடத்தியதன் பின்புலத்தில் ரஷ்யா இருக்கக் கூடும் என பாராளுமன்ற உறுப்பினர் விமல் வீரவன்ஸ சந்தேகம் வெளியிட்டுள்ளார்.

பிரிட்டனில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் உரையாற்றும் போதே அவர் இவ்வாறு கூறியுள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-



இஸ்ரேல் மீது ஹமாஸ் தாக்குதல் நடத்தியதன் பின்புலத்தில் புடின் இருக்கக் கூடும். ஹமாஸுக்கு பின்னால் இருந்து உதவுவது ஈரான் தான் என்பதை அனைவரும் அறிவார்கள். ரஷ்யாவின் சிறந்த நண்பர்களில் ஈரானும் ஒன்று.

ஹமாஸுக்கு உதவுங்கள், அப்போது உக்ரைன் மீதான கவனம் முற்றிலும் மறைந்துவிடும். இரு தரப்புக்கும் ஒரே நேரத்தில் அமெரிக்கா உதவ முடியாது. நீங்கள் அங்கே துப்பாக்கிச் சூடு நடத்தினால், உக்ரைன் விவகாரத்தை என்னால் கையாள முடியும் என ரஷ்ய ஜனாதிபதி புடின் ஈரானிடம் கூறியிருக்க கூடும் என்பது எனது கருத்து.

இது ஊகம்தான். ஆனால் இது போன்ற நகர்வுகள் இடம்பெற அதிக வாய்ப்பு உள்ளது. ஹமாஸுக்கு ஈரான் ஆயுதங்களை வழங்குகிறது. இந்த நேரத்தில், உக்ரைனில் உள்நாட்டு மோதல் உள்ளது. மேற்குலக நாடுகள் உக்ரைனுக்கு ஆதரவான நிலைப்பாட்டை எடுத்துவருவதால் இவற்றை திசைத் திருப்ப சில முயற்சிகள் இடம்பெற்றிருக்கலாம்.

உக்ரைனைப் பயன்படுத்தி அமெரிக்கா விளையாடுகிறது. ஹமாஸைப் பயன்படுத்தி இங்கு விளையாடுவது யார் என்று எனக்குத் தெரியவில்லை-என்றார். (அ)




# தொண்டைமானாறு வாவி திறப்பு

யாழ்ப்பாணம், டிசெ. 23

நாட்டில் தற்போது நிலவும் சீரற்ற காலநிலையினால் கடந்த 12ஆம் திகதியில் இருந்து யாழ்ப்பாண மாவட்டத்தில் பெய்து வரும் கனமழை காரணமாக வடமராட்சி தொண்டமானாறு வாவி நேற்று திறந்து விடப்பட்டது.

கனமழை காரணமாக தேக்கி வைக்க முடியாத மேலதிக நீர் கடற்பரப்புக்குச் செல்வதற்கு திறந்து விடப்பட்டது.

நேற்றுக் காலை யாழ். மாவட்ட நீர்ப்பாசன திணைக்கள உத்தியோகத்தர்களினால் வாவி திறந்து விடப்பட்டது. (அ)



# பெரும்போக நெற்செய்கை கிளிநொச்சியில் பாதிப்பு!

கிளிநொச்சி, டிசெ. 23

நாட்டில் ஏற்பட்டுள்ள சீரற்ற காலநிலை காரணமாக கிளிநொச்சி மாவட்டத்தில் 2023 ஆம் ஆண்டுக்கான பெரும்போக நெற்செய்கை பாதிக்கப்பட்டுள்ளது.

குறித்த பாதிப்பினால் விவசாயிகள் பலர் நட்டத்தை எதிர்கெண்டுள்ளனர். செய்கை மேற்கொண்டு இரண்டு மாதம் கடந்த நிலையில் நெற் கதிர்கள் நீரில் மூழ்கியுள்ளன.

முரசுமோட்டை, பன்னங்கண்டி, கண்டாவளை, பெரியகுளம் உள்ளிட்ட பகுதிகளில் இவ்வாறு பாதிக்கப்பட்ட விவசாயிகள் ஆதங்கம் வெளியிட்டுள்ளனர்.

தொடர்ச்சியாக இடம்பெறுகின்ற வெள்ள அனர்த்தங்களில் விவசாயிகளின் நெற்செய்கை அழிவுறும் நிலையில், உரிய நட்ட ஈட்டினை பெற்றுக் கொள்வதில் பெரும் சிரமங்களை எதிர்நோக்குவதாகவும் அவர்கள் தெரிவித்துள்ளனர்.

இம்முறை இரணைமடு குளத்தின் நீர் வரத்து அதிகமாக காணப்பட்டதன் காரணமாக பலரது நெற்செய்கை மூழ்கியுள்ளதாகவும், விவசாயம் மேற்கொள்ளப்பட்ட வயல் நிலங்கள் பாதிக்கப்படாத வகையில் ஆரம்பத்திலேயே இரணைமடு குளத்தின் நீர் திறந்து விடப்பட்டிருந்தால் இவ்வாறு பாதிப்பினை தவிர்த்திருக்கலாம் எனவும் கவலை வெளியிடுகின்றனர். (அ)

# கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலைக்கு உடல் குழாய் உற்றுநோக்கல் இயந்திரம்

கிளிநொச்சி, டிசெ. 23

கிளிநொச்சி வைத்தியசாலைக்கு 6.6 கோடி பெறுமதியான உடல் குழாய் உற்று நோக்கல் இயந்திரம் றோட்டரி கழகத்தால் கையளிக்கப்பட்டுள்ளது.

கொழும்பு தெற்கு றோட்டரி கழகத்தின் ஏற்பாட்டில், அவுஸ்திரேலியன் மெடிக்கல் பவுண்டேசனின் நிதிப் பங்களிப்புடன் சர்வதேச றோட்டரி கழகங்களினால் 6.6 கோடி ரூபா பெறுமதியான குறித்த மருத்துவ பரிசோதனை இயந்திரம் வழங்கப்பட்டது.

குறித்த நிகழ்வு நேற்று முற்பகல் 11 மணியளவில் வைத்தியசாலை மண்டபத்தில் இடம்பெற்றது. அறிமுக நிகழ்வைத் தொடர்ந்து, குறித்த இயந்திரம் கையளிக்கப்பட்டது.

விருந்தினர்கள் வரவேற்கப்பட்டதை தொடர்ந்து, மங்கள விளக்கேற்றப்பட்டது.

தொடர்ந்து 6.6 கோடி ரூபா பெறுமதியான குறித்த இயந்திரம் வைத்தியசாலையிடம் கையளிக்கப்பட்டது.



2017ஆம் ஆண்டு முதல் குறித்த பரிசோதனை வசதி கிளிநொச்சி வைத்தியசாலைக்கு இல்லாமையால், நோயாளர்கள் சிரமங்களை எதிர் கொண்டதுடன், யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலைக்கு பரிசோதனைக்காக அனுப்பிவைக்கப்பட்டு வந்தனர்.

கிளிநொச்சி மாவட்ட மக்கள் மாத்திரமல்லாது மாங்குளம், வடமராட்சி கிழக்கு, புதுக்குடியிருப்பு, வடமராட்சி கிழக்கு, மூங்கிலாறு உள்ளிட்ட பகுதிகளை சேர்ந்த மக்களும் இவ்வைத்தியசாலையில் சிகிச்சை பெற முடியாத நிலை ஏற்பட்டது.

இந்நிலையில், குறித்த மருத்துவ பரிசோதனை இயந்திரத்தின் மூலம், சிகிச்சைக்காக வருகை தரும் நோயாளர்களுக்கான பரிசோதனைகள் ஜனவரி மாதம் முதல் முன்னெடுக்கும் வகையில் ஆரம்பிக்கப்படவுள்ளதாக கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலைப் பணிப்பாளர் வைத்தியர் எஸ்.சுகந்தன் தெரிவித்தார்.

நிகழ்வில் றோட்டரி கழக உறுப்பினர்கள், வைத்தியர்கள், தாதியர்கள் என பலரும் கலந்து கொண்டனர். (அ)

# மேலும் 1865 பேர் கைது!

கொழும்பு, டிசெ. 2

கடந்த 24 மணித்தியாலங்களில் நாடளாவிய ரீதியில் மேற்கொள்ளப்பட்ட விசேட சோதனை நடவடிக்கையில் 1,865 பேர் கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

கைது செய்யப்பட்டவர்களில் 145 பேருக்கு எதிராக தடுப்புக் காவல் உத்தரவு பெறப்பட்டுள்ளது.

அத்துடன், சட்டவிரோத சொத்துக்கள் தொடர்பில் 40 சந்தேகநபர்கள் விசாரணைக்கு உட்படுத்தப்படுவதுடன், போதைப்பொருளுக்கு அடிமையான 134 பேர் புனர்வாழ்வு நிலையங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளனர்.

அத்துடன், பொலிஸ் போதைப்பொருள் ஒழிப்புப் பிரிவு மற்றும் விசேட பணியகத்தின் பதிவு செய்யப்பட்ட சந்தேக நபர்கள் பட்டியலில் இருந்த 154 சந்தேக நபர்களும் இந்த நடவடிக்கையில் கைது செய்யப்பட்டுள்ளனர்.

குறித்த நடவடிக்கையில்,
ஹெரோயின் - 613 கிராம்
ஐஸ் - 746 கிராம்
கஞ்சா - 16 கிலோ 500 கிராம்
கஞ்சா செடிகள் - 272041
ஹஷீஷ் - 263 கிராம்
மாவா - 49 கிலோ 400 கிராம்
ஹேஷ் - 16 கிராம்
தூள் - 852 கிராம்
மதன மோதகம்- 479 கிராம்
போதை மாத்திரைகள் - 3142
கைப்பற்றப்பட்டுள்ளன. (அ)

# ஆறு நாட்களில் மட்டும் 190 டெங்கு நோயாளர்கள்

வடமராட்சி, டிசெ. 23

பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் கடந்த ஆறு நாட்களில் மட்டும் 190 டெங்கு நோயாளர்கள் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டிருப்பதாக மருத்துவமனை தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த ஆறு நாட்களில் (டிசெம்பர் 15-20) மட்டும் 190 பேர் டெங்கு காய்ச்சல் பாதிப்புடன் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இதேவேளை, கடந்த புதன் கிழமை நள்ளிரவு வரையான 24 மணி நேரத்தில் மட்டும் டெங்கு காய்ச்சல் பாதிப்புடன் 43 பேர் அனுமதிக்கப்பட்டிருப்பதன் மூலம் இதுவரையான நாட்களில் அதிக டெங்கு நோயாளர்கள் பதிவான நாளாக அமைந்திருப்பதாகவும் பருத்தித்துறை ஆதார மருத்துவமனை தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதையடுத்து டிசெம்பர் 01-20 வரையான 20 நாட்களில் மட்டும் டெங்கு காய்ச்சல் பாதிப்புடன் பருத்தித்துறை ஆதார மருத்துவமனையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டவர்களது எண்ணிக்கை 268 ஆக அதிகரித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ-2)

# பரிகாரப் பூசை செய்வதாகக் கூறி நகைகளை அபகரித்த இந்தியர்கள்

## கல்முனையில் சம்பவம்

அம்பாறை, டிசெ. 23

**உணவக உரிமையாளரது மனைவியான காசாளரான பெண்ணிடம் பரிகாரப் பூஜை செய்வதாக கூறி 8 பவுணுக்கு அதிகமான நகைகளை அபகரித்து தலைமறைவாகியுள்ள இரு இந்தியர்கள் குறித்து கல்முனை தலைமையக பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர்.**

கல்முனை தலைமையக பொலிஸ் பிரிவிற்குட்பட்ட நற்பிட்டிமுனை பாண்டிருப்பு சந்தியில் அமைந்துள்ள உணவகம் ஒன்றில் கடந்த புதன்கிழமை இரவு சம்பவம் இடம்பெற்றுள்ளதுடன் மறுநாள் பொலிஸாருக்கு கிடைக்கப்பெற்ற முறைப்பாட்டிற்கமைய விசாரணை முன்னெடுக்கப்பட்டுள்ளது.

சம்பவ தினமான அன்று இரு இந்தியர்கள் பரிகார பூசை தொடர்பாக இருவேறு சந்தர்ப்பங்களில் உணவக உரிமையாளரது மனைவியான பெண்ணிடம் உரையாடியுள்ளனர். இதற்கமைய குறித்த பரிகார பூசை தொடர்பில் சம்பவ தினமன்று இரவு குறித்த உணவகத்திற்கு வருகை தந்த இரு இந்தியர்களும் தனிமையில் இருந்த பெண்ணை அணுகி பரிகார பூசை தொடர்பில் குறிப்பிட்டுள்ளனர்.

இதன் போது குறித்த பூசைக்கு இணங்கிய அப்பெண் தன்னிடம் இருந்த தங்க மாலை உள்ளடங்கலாக ஏனைய நகைகளை ஒரு மண் சட்டியில் இரு இந்தியர்களும் குறிப்பிட்டபடி மண்சட்டியில் போட்டு மூடி பூசைக்கு கொடுத்துள்ளார்.

இவ்வாறு பூசை இடை நடுவில் சென்ற போது பூசைக்காக கொள்வனவு செய்யப்பட்ட தேசிக்காய் ஒன்றினை வீட்டின் உள்ளே வைக்குமாறு அப் பெண்ணை வேண்டியுள்ளனர்.

உடனடியாக அத்தேசிக்காயை பெற்ற அப்பெண் வீட்டின் உள்ளே சென்று பரிகாரம் நிறைவேற அதை வைத்துவிட்டு வந்துள்ளார்.அச்சமயம் உடனடியாக செயற்பட்ட இரு இந்தியர்களும் ஏற்கனவே தயாராகி கொண்டு வந்த பிறிதொரு மூடப்பட்ட மண்சட்டியை அவ்விடத்தில் மாற்றியதுடன் பூசையை நிறுத்தி பின்னர் தங்க நகை அடங்கிய மண்சட்டியை தம்வசம் எடுத்து கொண்டு உணவக உரிமையாளரது மனைவியான காசாளரான பெண்ணிடம் 3 நாட்களில் பின்னர் மண் சட்டியை திறந்து பார்க்குமாறு கூறி விடை பெற்று சென்றுள்ளனர்.

பின்னர் குறித்த உணவகத்திற்கு வந்த உணவக உரிமையாளர் தனது மனைவியான காசாளரிடம் கழுத்தில் கிடந்த நகை எங்கே என்று கேட்டுள்ளார். இதன்போது நடந்த அனைத்து விடயங்களையும் அப்பெண் கூறியுள்ளார். உடனடியாக செயற்பட்ட உணவக உரிமையாளர் 2 இந்தியர்களால் தனது மனைவியிடம் 3 நாட்களின் பின்னர் திறக்க கூறிய மண்சட்டியை திறந்து பார்த்துள்ளார்.

அங்கு அவர்களுக்கு அதிர்ச்சியே மிஞ்சியது. உடனடியாக 2 இந்தியர்கள் குறித்து தேடுதல் மேற்கொண்ட பாதிக்கப்பட்டவர்கள் ஏமாற்றத்துடன் கல்முனை பொலிஸ் நிலையத்தில் இறுதியாக முறைப்பாடு மேற்கொண்டுள்ளனர்.

(அ)

# களுவாஞ்சிகுடி பிரதேச செயலகத்தில் ஒளி விழா!



காரைதீவு, டிசெ. 23

மண்முனை தென் எருவில் பற்று பிரதேச செயலக வருடாந்த ஒளி விழா நிகழ்வானது பிரதேச செயலாளர் திருமதி சிவப்பிரியா வில்வரத்னம் தலைமையில் நேற்று முன் தினம் வியாழக்கிழமை பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் இடம்பெற்றது.

அதிதிகளினால் மங்கல விளக்கேற்றப்பட்டதனை தொடர்ந்து அருட்தந்தை ஜீ. அம்றோஸ் , அருட்திரு அ. நிரஞ்சன் ஆகியோரின் ஆசிச் செய்தியுடன் நிகழ்வுகள் ஆரம்பித்து வைக்கப்பட்டன.

பெரியகல்லாறு தூய அருளானந்தர் தேவாலய மாணவர்கள் மற்றும் தேற்றாத்தீவு புனித யூதா ததேயு தேவாலய மாணவர்களினால் கரோல் கீதம், நாடகம், நடனம் போன்ற பல கலைநிகழ்வுகள் ஆற்றுகை செய்யப்பட்டதுடன், பிரதேச செயலக உத்தியோகத்தர்களினால் பாடல்களும் இசைக்கப்பட்டது.

இதன் போது நத்தார் தாத்தா வருகையுடன், நிகழ்வுகளை ஆற்றுகை செய்த மாணவர்கள் மற்றும் அலுவலக உத்தியோகத்தர்களின் பிள்ளைகளுக்கான பரிசில்களும் வழங்கப்பட்டது.

இந் நிகழ்வில் உதவி பிரதேச செயலாளர் திருமதி சத்யகௌரி தரணிதரன், நிருவாக உத்தியோகத்தர் வே. தவேந்திரன், அலுவலக பதவிநிலை உத்தியோகத்தர்கள் உட்பட அலுவலக உத்தியோகத்தர்கள் என பலரும் கலந்து கொண்டனர். (அ)



# தேசிய வாசிப்பு மாதத்தை முன்னிட்டு திருப்பழுகாமம் நூலகத்தில் பரிசளிப்பு

அம்பாறை, டிசெ. 23

2023 ஆம் ஆண்டுக்கான தேசிய வாசிப்பு மாதத்தினை முன்னிட்டு மட்டக்களப்பு, பழுகாமம் பொது நூலக மண்டபத்தில் போட்டிகளில் வெற்றி பெற்ற மாணவர்களுக்கான பரிசளிப்பு விழா கடந்த வியாழக்கிழமை இடம்பெற்றது.

போரதீவுப்பற்று பிரதேச சபை மற்றும் பழுகாமம் பரம்பரை ஒன்றியத்தின் அனுசரனையுடனும் பழுகாமம் வாசகர் வட்டத்தின் ஒத்துழைப்புடனும் சிறந்த முறையில் ஒழுங்கு செய்யப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (அ)

# கல்முனை பூச்சியியல் பிரிவினால் பூச்சியியல் ஆய்வறிக்கை வெளியீடு

அம்பாறை, டிசெ. 23

கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனையின் சுகாதார பூச்சியியல் உத்தியோகத்தர் கே.ஏ. ஹமீட் தலைமையிலான குழுவினரால் தயாரிக்கப்பட்ட அரையாண்டு பூச்சியியல் ஆய்வறிக்கை கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளரிடம் கையளிக்கப்பட்டது.

குறித்த அறிக்கையின் முதல் பிரதியினை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளரிடம் கையளிக்கும் நிகழ்வு அண்மையில் இடம்பெற்றது.

இந்நிகழ்வின் போது பிராந்திய பூச்சியியல் ஆய்வுக்குழுவின் பொறுப்பாளர் சுகாதார பூச்சியியல் உத்தியோகத்தர் கே.ஏ.ஹமீட் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர்




வைத்திய கலாநிதி திருமதி சக்கிலா இஸ்ஸடீனிடம் ஆய்வறிக்கையின் முதல் பிரதியினை கையளித்தார்.

குறித்த ஆய்வறிக்கையின் விசேட பிரதியினை சுகாதார பூச்சியியல் உத்தியோகத்தர் எஸ்.ரீ.பிர்தௌஸ் பிராந்திய தொற்று நோய் பொறுப்பு வைத்திய அதிகாரி எம்.ஏ.சீ. எம்.பஸாலிடம் கையளித்தார்.

இந்நிகழ்வில் பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையின் பிரிவு தலைவர்கள், உத்தியோகத்தர்கள், ஊழியர்கள் எனப்பலரும் கலந்து கொண்டனர்.(அ)

# மட்டக்களப்பை பூர்விகமாக கொண்ட இளைஞன் பிரதீபன் அவுஸ்திரேலியா பாதுகாப்பு பணியில் அதிகாரியாக தெரிவு!

மட்டக்ளப்பு, டிசெ. 23

மட்டக்களப்பு சத்துருக்கொண்டான் கிராமத்தை பிறப்பிடமாகக்கொண்ட ஆஸ்திரேலியா மெல்பேனில் வசிக்கும் செல்வன் ஹரி பிரதீபன் ஆஸ்திரேலியா பாதுகாப்பு படையின் புலனாய்வு அதிகாரி பயிற்சிக்கு தெரிவு செய்யப்பட்டிருக்கிறார்.

திரு திருமதி பிரதீபன் தம்பதிகளின் சிரேஷ்டபுதல்வன் ஹரி பிரதீபன் மிகவும் சிறுவயதில் ஆஸ்திரேலியா பாதுகாப்பு படைக்கு தெரிவாகி இருந்தார்.



படை அதிகாரி ஹரியை ஆஸ்திரேலியா படை பிரதானிகள் விருது வழங்கி கௌரவித்தனர். பாதுகாப்பு படை பிரதானிகளுடன் ஹரியின் பெற்றோர்களும் இணைந்து கொண்டனர்.

# பெண்ணிடம் அத்துமீறியவர் கைது!

அம்பாறை, டிசெ. 23

வாழைப்பழம் விற்பனைக்காக தென் பகுதியில் இருந்து கல்முனை பகுதிக்கு வருகை தந்த சிங்கள பெண்மணியிடம் அத்துமீறி கட்டியணைத்த சந்தேக நபரை கல்முனை தலைமையக பொலிஸார் கைது செய்துள்ளனர்.

அம்பாறை மாவட்டம் கல்முனை பொதுச்சந்தை பகுதியில் 55 வயது மதிக்கத்தக்க பெண் ஒருவரே குறித்த சம்பவத்தில் பாதிக்கப்பட்டவராவார்.

சம்பவ தினமான நேற்று முற்பகல் வியாபார நடவடிக்கையில் குறித்த பெண் ஈடுபட்டுகொண்டிருந்த சமயம் 49 வயது மதிக்கத்தக்க மொனராகலை பகுதியைச் சேர்ந்த சந்தேக நபர் இச்செயலில் ஈடுபட்டுள்ளார்.

இதன்போது பாதிக்கப்பட்ட குறித்த பெண் கல்முனை தலைமையக பொலிஸ் நிலையத்தில் வழங்கிய முறைப்பாட்டிற்கமைய சிறுவர் பெண்கள் பிரிவு பொலிஸார் நடவடிக்கை மேற்கொண்டு சந்தேக நபரை கைது செய்துள்ளனர்.

இவ்வாறு கைது செய்யப்பட்ட சந்தேக நபரை கல்முனை நீதிவான் நீதிமன்றில் ஆஜர்படுத்துவதற்கான நடவடிக்கையில் பொலிஸார் ஈடுபட்டுள்ளனர்.

# செக் குடியரசின் பல்கலைக்குள் சூட்டுச் சம்பவத்தில் 15 பேர் பலி!

## மாணவன் ஒருவர் வெறியாட்டம்

**பராக், டிசெ. 23**

**மத்திய ஐரோப்பிய நாடாகிய செக் குடியரசின் தலைநகர் பராக்கில் பல்கலைக்கழகக் கட்டடம் ஒன்றில் நேற்று முன் தினம் வியாழக்கிழமை பிற்பகல் இடம்பெற்ற துப்பாக்கித் தாக்குதலில் குறைந்தது பதினைந்து பேர் உயிரிழந்திருக்கின்றனர். டசின் கணக்கானோர் காயமடைந்துள்ளனர்.**




அதே பல்கலைக்கழகத்தின் மாணவனாகிய 21 வயது வாலிபர் ஒருவரே துப்பாக்கி மற்றும் வெடிகுண்டுகளுடன் பல்கலைக்கழகக் கலைப்பீடக் கட்டடத்துக்குள் நுழைந்து கண்டபடி சுட்டு வெறியாட்டம் புரிந்துள்ளார். பொலீஸார் பின்னர் அந்த மாணவனைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவருவதற்காக நடத்திய சூட்டில் அவரும் உயிரிழந்தார் என்று தகவல்கள் தெரிவிக்கின்றன.

கொல்லப்பட்ட பல்கலைக்கழக மாணவனின் தந்தையாரது சடலம் நேற்று காலை அவனது வீட்டில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

படுகொலைகளைப் புரிவதற்கு முன்பாக அந்த மாணவன் தனது தந்தையையும் கொன்றிருக்கலாம் என நம்பப்படுகிறது.

தலைநகர் ப்ராக்கின் பழைய நகரின் மையத்தில் அமைந்துள்ள சார்ள்ஸ் பல்கலைக்கழகத்தில் நடந்த இந்தக் கொடூரத் தாக்குதல் செக் குடியரசு முழுவதும் அதிர்வலையை ஏற்படுத்தி உள்ளது.

தாக்குதல் தொடங்கிய கையோடு பொலீஸார் அந்தப் பகுதியை மூடி அடைத்து ஆட்களை வெளியேற்றினர். அயலில் வசிப்போரை வீடுகளில் தங்கியிருக்குமாறும் அறிவித்தனர்.

துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகிக் காயமடைந்தோரும் ஏனைய மாணவர்களும் பெரும் பயபீதியால் அலறியடித்துக் கொண்டு தப்பி ஓடினர். அதனால் அந்தப்பகுதியில் பெரும் பதற்றமான நிலை காணப்பட்டது.

தாக்குதலில் பயங்கரவாதத் தொடர்பு எதுவும் இல்லை என்பதைப் பாதுகாப்பு அதிகாரிகள் உறுதிப்படுத்தி உள்ளனர்.

கலைப்பீட மாணவன் எதற்காக இவ்வாறு ஒரு கொடூர தாக்குதலைப் புரிந்தான் என்பது தொடர்பில் விவரங்கள் தெரியவரவில்லை. வெளிநாடுகளில் இடம்பெறுகின்ற இது போன்ற சம்பவங்களால் ஈர்க்கப்பட்ட ஒருவரது செயலாக இருக்கலாம் என்று இதனைப் பொலீஸார் நம்புகின்றனர்.

செக் குடியரசின் பிரதமர் இந்தச் சம்பவத்தால் அதிர்ச்சி அடைவதாகக் குறிப்பிட்டுள்ளார். உயிரிழந்தோரது குடும்பங்களுக்கு அனுதாபங்களையும் வெளியிட்டிருக்கிறார். பிரான்ஸின் பிரதமர் எலிசபெத் போர்னும் செக் குடியரசு மக்களுக்கு அனுதாபச் செய்தியை விடுத்துள்ளார். (அ)

# ஹவுத்தி கிளர்ச்சியாளர் தாக்குதல் 100 கப்பல்கள் பாதையை மாற்றின




*லண்டன், டிசெ. 23*

ஹவுத்தி கிளர்ச்சியாளர்களின் தாக்குதல்களை தவிர்ப்பதற்காக 100க்கும் மேற்பட்ட கொள்கலன் கப்பல்கள் சூயல் கால்வாயிலிருந்து வேறு பாதைகளை பயன்படுத்த ஆரம்பித்துள்ளன.

100 இற்கும் மேற்பட்ட கப்பல்கள் ஹவுத்தி கிளர்ச்சியாளர்களின் தாக்குதல்களை தவிர்ப்பதற்காக தென் ஆபிரிக்க கடற்பகுதியை பயன்படுத்துகின்றன.

ஹவுத்தி கிளர்ச்சியாளர்களின் தாக்குதல்கள் கப்பல்போக்குவரத்திற்கு பாதிப்பை ஏற்படுத்துகின்றன என்பதற்கான அறிகுறி இது என கார்டியன் தெரிவித்துள்ளது.

103 கப்பல்கள் ஏற்கனவே பாதையை மாற்றியுள்ளன என குஹ்னே நஜெல் என்ற கப்பல் நிறுவனம் தெரிவித்துள்ளது.

இதன் காரணமாக கப்பல்கள் மேலும் 6000 கடல்மைல் தூரம் அதிகமாக பயணிக்க வேண்டியுள்ளது இதன் காரணமாக விநியோகங்கள் ஒரு மாத காலம் தாமதமாகும் நிலை யேற்பட்டுள்ளது.

19000 கப்பல்கள் வருடாந்தம் சூயல் கால்வாய் ஊடாக பயணிக்கின்றன. ஆசியா மற்றும் ஐரோப்பாவிற்கான எரிபொருள் மற்றும் வர்த்தக பொருட்களிற்கான முக்கிய விநியோக மார்க்கமாக இந்த கடல்மார்க்கம் காணப்படுகின்றது.

எண்ணெய் கப்பல்கள் எரிவாயு கப்பல்களும் தங்கள் பாதையை மாற்றியுள்ளன. (அ)



# ஹெரோய்னைவிட 300 மடங்கு வலிமையான செயற்கைப் போதைப்பொருள் லண்டனில்!

## உயர் பொலிஸ் அதிகாரி எச்சரிக்கை

*லண்டன், டிசெ. 23*

லண்டன் உள்ளிட்ட பிரித்தானியாவின் முக்கிய நகரங்களில் செயற்கை போதை மருந்துகளின் பயன்பாடு அதிகரித்துள்ளதாக எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

இதனால் போதைப்பொருளால் அழிக்கப்பட்ட சான் பிரான்சிகோவாக, லண்டன் மாறும் அபாயம் இருப்பதாகவும் பிரித்தனாயி உயர் பொலிஸ் அதிகாரி ஒருவர் எச்சரித்துள்ளார்.

கலிபோர்னியா மற்றும் பல அமெரிக்க நகரங்களில் ஓபியாய்டு நெருக்கடியால் பீடிக்கப்பட்டதைப் போல, போதைப்பொருள் அளவுக்கு அதிகமாக உட்கொள்ளும் தொற்றுநோய் விரைவில் பிரித்தானியாவை தாக்கும்.

இது பெரும் நெருக்கடியை ஏற்படுத்தும் என்று பொலிஸ் மற்றும் குற்றவியல் ஆணையர்களின் சங்கத்தின் தலைவர் டோனா ஜோன்ஸ் எச்சரித்துள்ளார்.

லண்டன் மற்றும் பிற பிரித்தானிய நகரங்கள் ஹெராயின் பற்றாக்குறையால் இதேபோன்ற நெருக்கடியை எதிர்கொள்வது "தவிர்க்க முடியாதது" என்று ஜோன்ஸ் கூறியுள்ளார்.

இந்த நெருக்கடியின் பின்னணியில் சீன கும்பல் இருக்கின்றது. ஹெராயினை விட 300 மடங்கு வலிமையான செயற்கை ஓபியாய்டுகளை சீன கும்பல் வழங்குவதாக அவர குற்றம் சுமத்தியுள்ளார்.

இதன்படி, அடுத்த 12 மாதங்களில் ஆப்பிரிக்கா மற்றும் ஐரோப்பாவில் சீன செயற்கை ஓபியாய்டு சந்தை விரிவாக்க செய்யப்படும் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

இந்த கும்பல் உலகம் முழுவதும் ஹெராயின்விநியோகத்தை உன்னிப்பாகக் கவனித்து வருகின்றன, மேலும் செயற்கை ஓபியாய்டுகளை கொண்டுவருவதற்கான வாய்ப்பைத் தெளிவாகக் கண்டுள்ளன," என்று அவர் மேலும் தெரிவித்துள்ளார். (அ)

# பிரான்ஸுக்குள் புலம்பெயர்வோரை தடுப்பதற்கு புதிய சட்டம் அறிமுகம்!

## வெற்றிகரமாக பிரேரணை தாக்கல் செய்த அரசு



*பாரிஸ், டிசெ. 23*

பிரான்ஸ் நாட்டுக்கு வரும் அகதிகள் குறித்த புலம் பெயர்வோர் சட்டத்தில் கடுமையான மாற்றங்களை கொண்டு வரும் வகையில் பிரேரணையை வெற்றிகரமாக தாக்கல் செய்துள்ளது.

பிரான்ஸ் நாட்டுக்குள் சட்டவிரோதமாக பல ஆண்டுகளாக அல்ஜீரியா, மொராக்கோ, போர்த்துக்கல், துருக்கி உள்ளிட்ட பல நாடுகளின் அகதிகள் தரைவழியாகவும், கடலவழியாகவும் நீண்ட தூர ஆபத்தான பயணங்களை மேற்கொண்டு மக்கள் உள்ளே நுழைந்து வருகின்றனர்.

சமீப வருடங்களாக பிரான்ஸில் இவ்வாறு உள்ளே நுழையும் அகதிகளால் பல்வேறு உள்நாட்டு சிக்கல்கள் எழுந்தன. கட்டுக்கடங்காமல் அகதிகள் நுழைவதை தடுக்கும் விதமாக சட்டம் இயற்ற வேண்டும் என அந்நாட்டு அரசியல் தலைவர்கள் விவாதித்து வந்தனர்.

இந்நிலையில், பிரான்ஸ் நாட்டுக்கு வரும் அகதிகள் குறித்த புலம் பெயர்வோர் சட்டத்தில் கடுமையான மாற்றங்களை கொண்டு வரும் வகையில் மசோதாவை வெற்றிகரமாக தாக்கல் செய்துள்ளது.

இந்த பிரேரணையை பிரான்ஸ் அதிபர் இம்மானுவல் மக்ரானின் ரெனய்ஸான்ஸ் கட்சி மற்றும் எதிர்கட்சி தலைவரும் தீவிர வலதுசாரி சிந்தனையாளருமான மரின் லெ பென் சார்ந்த நஷனல் ரேலி ஆகிய இரு கட்சிகளுமே ஒருமித்து கொண்டு வந்திருக்கின்றன.

மக்ரோனின் கட்சிக்குள்ளேயே இதற்கு ஒரு சிலர் எதிர்ப்பு தெரிவித்தாலும் அவர் இதனை பொருட்படுத்தவில்லை. விரைவில் சட்ட அந்தஸ்து பெற உள்ள இந்த பிரேரணைப்படி புலம் பெயர்ந்தவர்கள் தங்கள் குடும்பத்தினரை கொண்டு வருவது கடினமாக்கப்பட்டுள்ளது. அவர்களுக்கு அரசு வழங்கும் நலத்திட்ட உதவிகள் கிடைப்பதும் தாமதமாகும்.

குடிமகன்கள் வேறு, அகதிகள் வேறு என பாகுபாடு காட்டும் இதன்படி சட்டபூர்வமாக குடியேறுவர்களுக்கும் நலத்திட்ட உதவிகள் கிடைப்பதை கடினமாகி உள்ளது.

"நாட்டில் புலம் பெயர்பவர்களால் பிரச்சனை இருப்பது உண்மைதான். இதனால் உள்நாட்டில் அமைதியின்மை தோன்ற கூடிய நிலை இருந்தது. அதனை தடுக்க வேண்டியது அரசின் கடமை. வெள்ளம் போல் உள்ளே நுழையும் அகதிகளை தடுக்கும் கவசமாக இந்த சட்டம் அமையும்" என ஜனாதிபதி மக்ரான் தெரிவித்தார்.

ஐரோப்பிய நாடுகளுக்குள் நுழையும் அகதிகளுக்கு உறுப்பினர் நாடுகளின் எல்லைக்கருகே மையம் அமைக்கவும், நுழைவதற்கு அனுமதி மறுக்கப்படும் அகதிகளை உடனுக்குடன் அவரவர் சொந்த நாட்டிற்கு திருப்பி அனுப்பவும், ஐரோப்பிய ஒன்றிய உறுப்பினர் நாடுகள் ஒரு ஒப்பந்தத்தை சில தினங்களுக்கு முன் உருவாக்கியது குறிப்பிடத்தக்கது.

(அ)

# போதைப்பொருள் வர்த்தகத்துக்கு விரைவில் முற்றுப்புள்ளி இடப்படும்!

## அமைச்சர் டிரான் அலஸ் கருத்து



**கொழும்பு, டிசெ. 23**
**நாட்டில் போதைப்பொருள் வர்த்தகத்தையும் பாதாள உலக செயற்பாடுகளையும் ஒடுக்கும் நடவடிக்கைக்கு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பூரண ஆதரவு வழங்கியுள்ளதாகவும் அதனால் எத்தகைய அழுத்தங்கள் வந்தாலும் போதைப் பொருள் வர்த்தகத்திற்கு முற்றுப்புள்ளி வைக்கப்படும் எனவும் பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் டிரான் அலஸ் தெரிவித்தார்.**

நாட்டிற்கு பெரும் கேடாக விளங்கும் போதைப்பொருள் பாவனையையும் பாதாள உலக செயற்பாடுகளையும் ஒடுக்க அனைவரும் ஒத்துழைக்க வேண்டும் எனவும் அமைச்சர் சுட்டிக் காட்டினார்.

ஜனாதிபதி ஊடக மையத்தில் நடைபெற்ற ஊடக சந்திப்பில் கருத்துத் தெரிவிக்கும் போதே பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் டிரான் அலஸ் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

"யுக்திய" என்ற பெயரில் முன்னெடுக்கப்படும் போதைப் பொருள் தடுப்பு சிறப்பு நடவடிக்கை குறித்து தற்போது நாடு முழுவதும் பேசப்படுகிறது. இந்த நாட்டில் போதைப்பொருள் வர்த்தகமும் பாதாள உலக செயற்பாடுகளும் தொடர்ந்து இடம்பெற்று வருகின்றன. இவற்றை யாராவது நிறுத்த வேண்டும். எனவே இதனை நிறுத்த தீர்மானித்தேன். அதற்காகத்தான் "யுக்திய" சிறப்பு நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டது. இந்த விடயத்தில் சமூக பொலிஸ் குழுக்களுக்கும் விசேட பொறுப்பு வழங்கப்பட்டுள்ளது.

மேலும், இந்த நடவடிக்கை வெற்றியடைய மக்களின் ஆதரவும் குறிப்பாக ஊடகங்களின் ஆதரவும் அவசியம். முப்பது வருட யுத்தம் வடக்கு கிழக்கில் மாத்திரமே இருந்தது. ஆனால் தற்போதுள்ள இந்த யுத்தம் நாடு பூராகவும் பரவியுள்ளது. இதனை முடிவுக்குக் கொண்டு வர பொதுமக்கள் வழங்கும் ஆதரவு பாதுகாப்புத் துறைக்கு பெரும் பலமாக அமைந்துள்ளது.

எனவே, இதற்குத் தேவையான ஆதரவையும் சரியான தகவல்களையும் வழங்குமாறு கேட்டுக்கொள்கிறேன். அவ்வாறு முழுமையான ஒத்துழைப்பு கிடைத்தால் அடுத்த வருடம் ஜூன் மாதத்திற்குள் போதைப் பொருள் வர்த்தகத்தையும் பாதாள உலக செயற்பாடுகளையும் ஒழிக்க முடியும் என நான் நம்புகிறேன்.

அத்துடன், கடல் மார்க்கமாக இந்நாட்டுக்கு போதைப் பொருள் கொண்டு வருவதைத் தடுக்க விசேட செயல்திட்டமொன்றை கடற்படையினர் ஆரம்பித்துள்ளனர். முதலில், நாட்டில் இயங்கும் போதைப் பொருள் விநியோக வலையமைப்பை நிறுத்த வேண்டும். இரண்டாவதாக போதைப் பொருள் வர்த்தகத்துடன் தொடர்புடைய பாதாள உலக செயற்பாடுகள் நிறுத்த வேண்டும்.

மூன்றாவதாக, போதைப் பொருட்களைப் பயன்படுத்துவோர் தொடர்பில் விசேட கவனம் செலுத்தப்பட வேண்டும். போதைக்கு அடிமையானவர்களுக்குப் பதிலாக போதைப்பொருள் வியாபாரிகள் தொடர்பில் விசேட கவனம் செலுத்துமாறு பொலிஸ் மா அதிபருக்கு பணிப்புரை வழங்கினேன்.

போதைப்பொருள் வர்த்தகம் மற்றும் பாதாள உலகக் குழுக்களுடன் தொடர்புடைய *4,665* பேர் இருப்பதாக புலனாய்வுத் தகவல்கள் எமக்கு கிடைத்துள்ளன. இவர்கள் அனைவரையும் கைது செய்ய உத்தரவிட்டுள்ளேன். கடந்த *04* நாட்களில் மாத்திரம் புலனாய்வுத் துறை அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள *731* பேர் கைது செய்யப்பட்டுள்ளனர். புலனாய்வு அறிக்கைகளில் குறிப்பிடப்படாத சந்தேக நபர்களும் இதன்போது கைது செய்யப்பட்டுள்ளனர்.

இதற்கு மேலதிகமாக *8,451* பேர் கைது செய்யப்பட்டுள்ளனர். அவர்களில் *346* பேர் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர். *61* பேர் சொத்து விசாரணைக் காகவும், *697* பேர் புனர்வாழ்வுக்காகவும் அனுப்பப்பட்டுள்ளனர்.

அத்துடன், கடந்த *04* நாட்களாக மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பில் *431* மில்லியன் ரூபா பெறுமதியான கஞ்சா, ஹஷிஸ், ஹெரோயின், ஐஸ், கஞ்சா உள்ளிட்ட பெருந்தொகை போதைப் பொருட்களை பொலிஸார் கைப்பற்றியுள்ளனர்.

சந்தேக நபர்களுக்கு சொந்தமான வாகனங்கள், வீடுகள் உள்ளிட்ட சொத்துக்களின் பெறுமதி சுமார் *162* மில்லியன் ரூபாவாகும். எனவே, இதன் ஊடாக இந்த முயற்சி எவ்வளவு தூரம் வெற்றிகரமாக அமைந்துள்ளது என்பதை நீங்கள் அனைவரும் அறிந்துகொள்ளலாம். இவ்வாறு கைப்பற்றப்படும் அனைத்துப் பொருள்களையும் நீதிமன்றம் மூலம் அரசுடைமையாக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

இந்த பணிகளை ஆரம்பிக்க முன்னர் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவைச் சந்தித்து கலந்துரையாடினேன். போதைப் பொருள் வர்த்தகம் மற்றும் பாதாள உலக செயற்பாடுகள் நாட்டிலிருந்து ஒழிக்கப்பட வேண்டும் என்ற நிலைப்பாட்டிலேயே ஜனாதிபதியும் உள்ளார். எனவே ஜனாதிபதியின் ஆதரவுடன் முன்னெடுக்கப்படும் இந்த செயற்பாடுகள் எத்தகைய அழுத்தங்கள் வந்தாலும் நிறுத்தப்படமாட்டாது. அதேபோன்று, இதனை ஒரு வாரத்துடன் நிறுத்தாது தொடர்ந்து செயல்படுத்துவோம். இந்நாட்டில் போதைப் பொருள் மற்றும் பாதாள உலக செயற்பாடுகள் முழுமையாக நிறுத்தப்பட்டு, எதிர்கால சந்ததியினர் அச்சமோ சந்தேகமோ இன்றி வாழக்கூடிய சூழலை நாம் உருவாக்குவோம்.

சிறுவர்கள், பெண்கள் மீதான துஷ்பிரயோகம் தொடர்பிலும் முறைப்பாடுகள் கிடைக்கின்றன. இந்த முறைகேடுகளைத் தடுக்கும் வகையில், எதிர்வரும் ஜனவரி முதல் வாரத்தில் இருந்து பாதுகாப்புத்துறைக்கு அவசர தொலைபேசி எண் ஒன்றை அறிமுகப்படுத்துமாறு அறிவுறுத்தியுள்ளேன். எனவே, இந்த விசேட தொலைபேசி எண்ணின் கீழ் பெண் பொலிஸார் கடமையில் ஈடுபடுத்தப்படுவார்கள். பெரும்பாலும் பெண்கள் தங்கள் பிரச்சனைகளை ஆண் பாதுகாப்புத்துறை அதிகாரிகளிடம் கூறத் தயங்குகிறார்கள்.

எனவே, *24* மணி நேரமும் இயங்கும் இந்த செயற்பாட்டு அறையில், பெண் காவலர்களை மாத்திரம் பணியமர்த்தப்படுவார்கள். இது தவிர, தமிழில் முறைப்பாடுகளை அளிக்கக்கூடிய வகையில் மேலுமொரு புதிய எண்ணை அறிமுகப்படுத்தவும் திட்டமிடப்பட்டுள்ளது-என்றார். (அ)

# நத்தார் பண்டிகையை முன்னிட்டு விசேட பஸ், ரயில் போக்குவரத்து!



கொழும்பு, டிசெ. 23
எதிர்வரும் நத்தார் பண்டிகை காலத்தை முன்னிட்டு நாடளாவிய ரீதியில் விசேட பாதுகாப்பு வேலைத்திட்டத்தை நடைமுறைப்படுத்த பொலிஸார் திட்டமிட்டுள்ளனர்.

அதற்காக பதில் பொலிஸ் மா அதிபர் ஏற்கனவே இரண்டு விசேட சுற்று நிருபங்களை வெளியிட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர், சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர், சட்டத்தரணி நிஹால் தல்துவ தெரிவித்தார்.

பொதுமக்கள் அதிகமாக நடமாடும் இடங்களில் சிவில் உடையிலும் பொலிஸ் உத்தியோகத்தர்கள் பாதுகாப்புக்காக ஈடுபடுத்தப்பட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

இதேவேளை, எதிர்வரும் பண்டிகை காலத்தை முன்னிட்டு நேற்று முதல் விசேட பஸ் மற்றும் ரயில் சேவையை ஆரம்பிக்க திட்டமிடப்பட்டுள்ளது.

கிறிஸ்மஸ் மற்றும் பாடசாலை விடுமுறை நாட்களில் சொந்த ஊர்களுக்கு செல்லும் மக்களுக்காக விசேட பஸ் மற்றும் ரயில் சேவைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளதாக குறிப்பிடப்படுகின்றது.

இதன்படி நீண்ட தூர சேவைகளுக்காக *100* மேலதிக பஸ்கள் சேவையில் ஈடுபடுத்தப்படும் என இலங்கை போக்குவரத்து சபை அறிவித்துள்ளது. (அ)

# மருந்தகங்கள் சுற்றிவளைப்பு ஐவர் பொலிஸாரினால் கைது!

கொழும்பு, டிசெ. 23
வைத்திய பரிந்துரை சீட்டு மற்றும் மருந்தாளர்கள் இன்றி மருந்துகளை விநியோகித்த 5 சந்தேக நபர்களை சீதுவை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

நேற்று முன் தினம் கம்பஹா பொது சுகாதார பரிசோதகர்கள் மற்றும் சீதுவை சுகாதார வைத்திய அதிகாரிகளின் ஆதரவுடன் சீதுவ பொலிஸ் உத்தியோகத்தர்கள் சீதுவை மருந்தகங்களை சோதனையிட்டனர்.

இதன்போது பாடசாலைகளுக்கு அருகாமையில் அமைந்துள்ள மருந்தகங்களில் மருந்துச் சீட்டு இல்லாமல், மருந்தாளர்கள் இன்றி மருந்துகளை விநியோகித்த குற்றத்திற்காக *1600* மருந்துகளுடன் *5* பேர் கைது செய்யப்பட்டனர்.

கைது செய்யப்பட்டவர்கள் *23, 29, 32, 53* மற்றும் *65* வயதுடைய பண்டாரவளை, வெலிசறை, திவுலப்பிட்டிய, நீர்கொழும்பு மற்றும் சீதுவை ஆகிய பகுதிகளைச் சேர்ந்தவர்கள் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

சீதுவை பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். (அ)

# கெஹலியவை அரசாங்கம் உடனே பதவி நீக்கவேண்டும்

கொழும்பு, டிசெ. 22
நாட்டு மக்களின் சுகாதார நலனுக்கு குந்தகம் விளைவித்த கெஹெலிய ரம்புக்வெலவை அரசாங்கம் உடனடியாக பதவி நீக்கவேண்டும் என இரண்டாவது தலைமுறை வைத்தியர் சங்கம் கோரிக்கை விடுத்துள்ளது.

கொழும்பில் இடம்பெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் கலந்துகொண்டு கருத்து வெளியிட்ட அந்த அமைப்பின் பிரசார செயலாளர் சேனக அபேசிங்க இந்தக் கோரிக்கையை முன்வைத்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

சுகாதார அமைச்சில் பாரிய மோசடிகள் இடம்பெற்றுள்ளன. முன்னாள் செயலாளர் கைதுசெய்யப்பட்டுள்ள போதிலும் மோசடியில் ஈடுபட்ட முக்கிய நபர்கள் சுதந்திரமாகவே இருக்கின்றனர்.

மருந்து மோசடிக்கும் முன்னாள் சுகாதார அமைச்சருக்கும் தொடர்பு உள்ளமை தெரியவந்துள்ளது. எனினும் அவரை வெளியேற்றுவதற்குப் பதிலாக புதிய அமைச்சு வழங்கப்பட்டுள்ளது.

விளையாட்டுத் துறை அமைச்சரை பதவி நீக்க முடியும் என்றால், கெஹெலியவை மட்டும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பாதுகாப்பது ஏன்? அவருக்கு எதிராக நடவடிக்கை எடுக்காமைக்கு காரணம் என்ன?

ஓர் அமைச்சரின் நிர்வாகத்துக்குக் கீழ் மோசடிகள் இடம்பெற்றிருக்குமானால் அதற்கு அவர் பொறுப்புக் கூற வேண்டும்-என்றார். (அ)

# முஸம்மில் எம்.பியின் பாதுகாப்புப் பிரிவு சார்ஜன்டின் துப்பாக்கி, தோட்டா திருட்டு

கொழும்பு, டிசெ. 23
புறக்கோட்டை ஒல்கொட் மாவத்தையில் பஸ் நிலைய வேலிக்கு அருகில் உறங்கிக் கொண்டிருந்த பொலிஸ் சார்ஜன் ஒருவரின் பயணப் பையை திருடியதாக சந்தேகிக்கப்படும் ஒருவர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

பாதிக்கப்பட்ட பொலிஸ் சார்ஜன்ட் பாராளுமன்ற உறுப்பினர் முஸம்மிலின் பாதுகாப்பு பிரிவில் கடமையாற்றுபவராவார்.

விசாரணையில் கைத்துப்பாக்கி, தோட்டாக்கள், பொலிஸ் உடைகள், அமைச்சரவை பாதுகாப்புப் பிரிவின் உடை, உத்தியோகபூர்வ அடையாள அட்டை மற்றும் மேலும் சில பொருட்கள் கிருலப்பனை பொலிஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளன.

பொலிஸாரால் மேற்கொள்ளப்பட்ட சோதனை நடவடிக்கையின்போது சந்தேகத்திற்கிடமான முறையில் காணப்பட்ட நபரிடத்தில் மேற்கொள்ளப்பட்ட விசாரணையில் இப்பொருட்கள் கைப்பற்றப்பட்டுள்ளன.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (அ)

## ஜனாதிபதித் தேர்தலில்...

கட்டாயமாகும் என்றும் கூறியுள்ளார்.

ஜனாதிபதி - வடக்கு, கிழக்கு தமிழ் பாராளுமன்ற உறுப்பினர்களின் சந்திப்பு தொடர்பில் அவர் வெளியிட்ட அறிக்கையிலேயே மேற்கண்டவாறு தெரிவிக்கப்பட்டது. அந்த அறிக்கையில் அவர் மேலும் கூறியவை வருமாறு,

"2026 ஆம் ஆண்டின் பொதுத்தேர்தலின் பின்னரே புதிய அரசியல் யாப்பின் ஊடாக தேசிய இனப் பிரச்னைக்குத் தீர்வு காணமுடியும் என்று ஜனாதிபதி தெரிவித்திருப்பது இனப்பிரச்னைத் தீர்வின் மேல் அக்கறை உள்ளது போல் காட்டிக்கொள்வதே ஆகும். இதன் காரணமாகவே ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க வடக்கு-கிழக்கு நல்லிணக்க செயல்பாடுகள் தொடர்பாகவும் அபிவிருத்தி தொடர்பாகவும் பேசுவதற்காக வடக்கு-கிழக்கு பாராளுமன்ற உறுப்பினர்களை அழைத்திருந்தார்.

இதில் வடக்கு மாகாணத்திலிருந்து ஈ.பி.டி. பியைச் சார்ந்த திலீபன் என்ற உறுப்பினரைத் தவிர, வேறுயாரும் கலந்துகொள்ளவில்லை. கிழக்கு மாகாணத்திலிருந்து சம்பந்தன், சாணக்கியன், கோவிந்தன் கருணாகரம் மற்றும் கலையரசன் ஆகியோர் கலந்துகொண்டிருந்தனர். ஆளும் தரப்பை சேர்ந்த அமைச்சர்களான டக்ளஸ் தேவானந்தாவோ, வியாழேந்திரனோ, சந்திரகாந்தன் என்றழைக்கப்படும் பிள்ளையானோ இதில் கலந்துகொள்ளவில்லை.

வடக்கு-கிழக்கு அபிவிருத்தி பற்றிப் பேசுகின்றபோது வடக்கு-கிழக்கின் அமைச்சர்களாக இருப்பவர்களும் கலந்துகொள்ளவில்லை. ஜனாதிபதியின் ஏமாற்றுத்தனமான நடவடிக்கைகளை கண்டுதான் வடக்கு மாகாணத்திலிருந்து பாராளுமன்ற உறுப்பினர்கள் கலந்துகொள்ளவில்லை. இத்தகைய சூழ்நிலையில்தான் வடக்கு-கிழக்கு அபிவிருத்தி தொடர்பாகவும் நல்லிணக்கம் தொடர்பாகவும் பேசப்பட்டதாக அறிகிறோம்.

நல்லாட்சி அரசாங்கத்தில் ரணில் விக்கிரமசிங்க பிரதமராக இருந்த பொழுது ஒரு புதிய அரசியல் சாசனத்தைத் தயாரிப்பதற்கான பல்வேறுபட்ட குழுக்கள் அமைக்கப்பட்டு வரைவுகளும் மேற்கொள்ளப்பட்டன. ஆனால், ரணிலுக்கும் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்கும் ஏற்பட்ட முரண்பாடுகள் காரணமாக அன்றைய புதிய அரசியல் சாசனத்திற்கான முயற்சிகள் முடக்கப்பட்டன.

இப்போது ரணில் விக்கிரமசிங்க ஜனாதிபதியாக தெரிவானதன் பின்னர், இனப்பிரச்னைத் தீர்வின் மேல் அக்கறை உள்ள ஜனாதிபதியாகத் தன்னைக் காட்டிக்கொள்ள முயற்சி செய்கிறார். தமிழர் தரப்புகளை அழைத்து பேசினார். பாராளுமன்றத்தில் பதின்மூன்றாவது திருத்தத்தை அமுல்படுத்துவதற்கு ஏனைய கட்சிகளை ஆதரவளிக்கும்படி கோரினார். அவர்களும் ஆதரவளிப்பதாக பாராளுமன்றத்தில் தெரிவித்தனர்.

டில்லிக்குச் சென்றபொழுதும் 13ஐ முழுமையாக நிறைவேற்றுவதாக இந்தியப் பிரதமருக்கு உறுதிமொழி அளித்தார். அவ்வப்போது சர்வதேச அழுத்தங்கள் வருகின்றபோது இனப்பிரச்னையைத் தீர்ப்பதாகக் கூறுவதை ஒரு வழக்கமாகக் கொண்டிருக்கின்றார்.

இந்த விதத்தில்தான் நேற்றைய (நேற்று முன்தின) கூட்டமும் ஜனாதிபதி செயலகத்தில் நடைபெற்றது. ஊடகங்களின் செய்திகளின்படி மயிலத்தமடு காணிப்பிரச்னை, பயங்கரவாதத் தடைச் சட்டத்தின்கீழ் கைது செய்யப்பட்டவர்களின் விடுதலை, கல்முனை தமிழ்ப் பிரதேச செயலகத்தை தரமுயர்த்துதல் போன்ற பல விடயங்கள் தொடர்பாக பேசப்பட்டதாகவும் அவற்றைச் செய்வதாக ஜனாதிபதி உறுதியளித்ததாகவும் கூறப்படுகின்றது.

இதில் கலந்துகொண்ட கூட்டமைப்பின் தலைவர் சம்பந்தன் பேசுகின்ற பொழுது, "வடக்கும் கிழக்கும் மீள இணைக்கப்பட வேண்டும், இந்திய-இலங்கை ஒப்பந்தம் நிறைவேற்றப்பட்டு பதின்மூன்றாவது திருத்தம் முழுமையாக அமுல்படுத்தப்படவேண்டும். இல்லையேல் சர்வதேச உதவிளை நாடவேண்டியிருக்கும்" என அவர் கூறினார் என்று அறியமுடிகின்றது.

இதற்குப் பதிலளித்த ஜனாதிபதி, 2025இல் பாராளுமன்றத் தேர்தலை நடத்தி ஒருவருட காலத்திற்குள் புதிய அரசியல் சாசனத்துக்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்" என்று கூறியது மாத்திரமல்லாமல் தற்போது பதின்மூன்றாவது திருத்தத்தில் இருந்து பறிக்கப்பட்ட சில அதிகாரங்களை மீள வழங்குவதற்கு ஆலோசிக்கலாம் என்றும் கூறியுள்ளார்.

அதாவது ஒரு விடயத்தை அவர் மிகவும் தெளிவாக கூறுகிறார். 2026ஆம் ஆண்டு முடிவடைந்தாலும்கூட தீர்வு கிடைப்பது சந்தேகமே என்பதை அவர் வெளிப்படுத்தியிருக்கிறார். அரசியல் சாசனத்தில் இருக்கக்கூடிய பதின்மூன்றாவது திருத்தத்தை நடைமுறைப்படுத்துவதற்கு கால அவகாசங்களை கோருகின்ற ஒரு விடயத்தைத்தான் எம்மால் பார்க்க முடிகின்றது.

அது மாத்திரமல்லாமல் ஜனாதிபதித் தேர்தலிலும் பாராளுமன்றத் தேர்தலிலும் எவ்வாறு வெற்றிகொள்வது அதற்குப் புலம்பெயர் தமிழர்களையும் வடக்கு-கிழக்குத் தமிழர்களையும் எவ்வாறு பயன்படுத்திக்கொள்வது போன்ற சிந்தனைகளில் ஜனாதிபதி ஈடுபடுகின்றாரே தவிர, இனப்பிரச்னைக்கான தீர்வு என்பது அவரது முன்னுரிமைப் பட்டியலில் கிடையவே கிடையாது என்பது வெளிப்படையாகவே தெரிகிறது.

இப்பொழுது புதிய இந்திய உயர்ஸ்தானிகர் இலங்கைக்கு வந்திருக்கின்றார். அவரை நாங்கள் இருகரம் கூப்பி வரவேற்கின்றோம். யுத்தம் முடிந்து 14 வருடங்கள் கடந்த பின்னரும்கூட, தமிழ்த் தேசிய இனப்பிரச்னைக்குத் தீர்வுகாண சிங்கள அரசதரப்பினர் தயாராக இல்லை என்பதை புதிய இந்திய உயர்ஸ்தானிகர் தயவு செய்து புரிந்துகொள்ள வேண்டும்.

இலங்கை ஆட்சியாளர்கள் தமிழ் மக்களுக்குக் கொடுக்கும் உறுதிமொழிகளும் டில்லிக்குக் கொடுக்கும் உறுதிமொழிகளும் அடுத்த கனமே காற்றில் பறக்கவிடப்படுகின்றது என்பதுதான் நிதர்சனமான உண்மை.

இத்தகைய ஒரு சூழ்நிலையில் சிங்கள அரசியல் தலைமைகளின் அசமந்தப் போக்கைச் சுட்டிக்காட்டக்கூடிய வகையில் தமிழ் மக்கள் ஜனாதிபதி தேர்தலில் ஒரு பொது வேட்பாளரை நிறுத்தி அவருக்கு வாக்களிக்க வேண்டியது காலத்தின் கட்டாயமாகும்" - என்றுள்ளது. (ஐ)

## பருத்தித்துறை...

மாத்திரைகளுடன் இருவர் உட்பட 30 பேர் கைது செய்யப்பட்டனர் என்று பருத்தித்துறை பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி தெரிவித்தார். (ஐ-2)

## தமிழக...

ஏனைய, 13 மீனவர்களுக்கு நிபந்தனையுடனான விடுதலை அறிவிக்கப்பட்டது. எனினும், கடற்படையினரை அவர்கள் தாக்கியிருந்தனர். இது தொடர்பான வழக்கில் அவர்களை தடுத்து வைக்குமாறு பொலிஸார் விண்ணப்பித்தனர். இதையடுத்து அவர்களும் வரும் 25ஆம் திகதி வரை மறியலில் வைக்கப்பட்டனர்.(ஐ-02)

## ஆதாரங்கள்...

கெஹலிய ரம்புக்வெலவை கைது செய்யாமை தொடர்பான குற்றச்சாட்டு தொடர்பில் எழுப்பப்பட்ட கேள்விக்கே அவர் மேற்கண்டவாறு பதிலளித்தார்.

அமைச்சரை கைது செய்ய வேண்டுமென ஊடகங்களும் அரசியல் கட்சிகளும் கூச்சல் போடுவதால் அது நடக்காது. இந்த விவகாரத்தில் தற்போது சிலர் கைது செய்யப்பட்டுள்ளனர் என்றும் அவர் கூறினார். (ஐ)

## சிறை...

மேற்பட்ட முறைப்பாடுகள் கிடைக்கப் பெற்றுள்ளன என்று இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

மனித உரிமைகள் ஆணைக்குழு, ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, நீதி அமைச்சர் மற்றும் பொது பாதுகாப்பு அமைச்சர் ஆகியோருக்கு இது தொடர்பான தகவல்களை தெரிவித்து கடிதம் ஒன்றை அனுப்பியுள்ளது.

வருடத்தின் முதல் 6 மாதங்களில் 200க்கும் மேற்பட்ட சித்திரவதை முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றுள்ளன.

காவலில் இருந்த போது ஏற்பட்ட 6 மரணங்கள் மற்றும் தடுப்புக் காவலில் இருந்த 2 மரணங்கள் நிகழ்ந்தன என்று முறைப்பாடுகள் மூலம் தெரிய வந்துள்ளது.

சர்வதேச மனித உரிமைகள் தினத்துடன் இணைந்து, சந்தேகநபர் பொலிஸ் காவலில் இருக்கும் போது, மர ணம், சித்திரவதை மற்றும் ஏனைய பிரச்னைகளைத் தடுப்பதற்கான வரைவு வழிகாட்டுதல்கள் மற்றும் பரிந்துரைகள் அடங்கிய அறிக்கையையும் மனித உரிமைகள் ஆணைக்குழு இலங்கை பொலிஸாருக்கு வழங்கியது.

பொலிஸாருக்கு வழங்கப்பட்டுள்ள இந்த வழிகாட்டல் அறிக்கை தொடர்பில் சட்டமா அதிபரின் கருத்தையும் மனித உரிமைகள் ஆணைக்குழு கோரியுள்ளது. (ஐ)

## திட்டமிடப்படாத...

இடம்பெற்று வருகின்றன. இதனாலேயே வடக்கு மாகாணத்தில் அண்மைக்காலமாக வெள்ள அனர்த்தம் ஏற்படுகின்றது. தரைத்தோற்ற அமைப்பின்படி வவுனியாவின் கல்மடுக்குளமே முதலில் நீர்நிறைந்து வான்பாயும். அதன் பின்னரே படிப்படியாக ஏனைய குளங்கள் வான்பாயும் நிலை ஏற்படும்.

பொதுவாக ஓர் அபிவிருத்தியை திட்டமிடும்போதும் சூழலியல், பௌதிகவியல் சார்ந்த ஆய்வுகள் முக்கியமானவை. இந்த ஆய்வறிக்கைகளின் பிரகாரமே அபிவிருத்தி நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட வேண்டும். சூழலியல் சார் ஆய்வை புறக்கணிக்க முடியாதவாறான அபிவிருத்திப் பணி கட்டாயமானது. ஆனால், வடக்கில் மேற்கொள்ளப்படும் அபிவிருத்தித் திட்டமிடல்களில் இவை புறக்கணிக்கப்படுகின்றன.

தற்போதைய நிலைமையில் யாழ்ப்பாணத்தில் ஒரேதடவையில்160 மில்லிமீற்றர் மழைவீழ்ச்சி கிடைத்தால் போதும். வர்த்தக நிலையங்களில் பெரும்பாலானவை வெள்ளத்தில் மூழ்கி விடும் அபாய நிலைமையே காணப்படுகின்றது. சரியான திட்ட மிடல் இல்லாமலேயே யாழ்ப்பாண மாநகரின் கட்டுமானங்கள் உள்ளன என்று அவர் கூறினார்.

மேலும், வடக்கு மாகாணத்துக்கென தனியான பிராந்திய வானிலை அவதானிப்பு நிலையம் அவசியமானது. ஏனெனில், தென்னிலங்கையை பொறுத்தவரை வங்கக் கடலில் ஏற்படும் மாற்றங்களைப் பொறுத்தே வானிலை மாற்றம் - மழைவீழ்ச்சி, புயல் ஏற்படும். ஆனால், வடக்கு மாகாணத்தைப் பொறுத்தவரை வங்கக் கடலில் ஏற்படும் மாற்றங்களும் தாக்கத்தை செலுத்தினாலும் அரபி கடலில் நிகழும் மாற்றங்களும் செல்வாக்கு செலுத்தும் எனவே, வடக்கு மாகாணத்துக்கென தனியான வானிலை அவதானிப்பு நிலையம் ஒன்றை அமைப்பதே இங்கு நிகழும் வானிலை மாற்றங்களை சரியாக கணிப்பதற்கு முடியும் - என்றார்.

இதேபோன்று எதிர்வரும் ஜனவரி 28ஆம் திகதி வரை வடக்கில் மழை வீழ்ச்சி தொடரும். இது தொடர்ச்சியாக இல்லாவிட்டாலும் இடையிடையே அதிக, மிதமான மழைவீழ்ச்சி கிடைக்கும் வாய்ப்பு உள்ளது - என்றும் சொன்னார்.

இந்த நேர்காணல் நாளை இரவு 7 மணிக்கு டான் தமிழ் ஒளியில் ஒளிபரப்பாகும். (ஐ)

## யாழ்.மாநகரில்...

மருத்துவர் த. பாலமுரளி அறிவித்துள்ளார்.

இந்தத் திட்டத்தின் கீழ் யாழ். மாநகர சபை எல்லைக்கு உட்பட்ட ஜே-103, ஜே-107, ஜே-97, ஜே-102, ஜே-100, ஜே-95, ஜே-91, ஜே-87, ஜே-83, ஜே-86, ஜே-85, ஜே-63, ஜே-62, ஜே-70, ஜே-72, ஜே-78, ஜே-75, ஜே-77, ஜே-79, ஜே-81 கிராம சேவகர் பிரிவுகளில் இன்றைய தினம் கொள்கலன் சேகரிப்பு நடைபெறவுள்ளது.

இந்த கொள்கலன் சேகரிப்பு நிகழ்வில் யாழ். மாநகர சபையின் சகல கழிவகற்றும் உழவு இயந்திரங்களும் ஈடுபடவுள்ளன. எனவே, பொதுமக்கள் வீட்டு வளாகங்களில் காணப்படும் - தேவையற்ற - தண்ணீர் தேங்கக்கூடிய பொருட்கள் அனைத்தையும் கழிவகற்றும் வாகனங்களிடம் ஒப்படைக்குமாறு கேட்டுள்ளார்.

அத்துடன், கடந்த ஆறு மாதங்களாக இந்த நடவடிக்கை தொடர்கின்ற போதும் டெங்கு நுளம்பின் பெருக்கத்தை கட்டுப்படுத்த முடியவில்லை. எனவே, பொதுமக்கள் தங்கள் வீட்டு வளாகங்களில், அயல் சூழலில் தண்ணீர் தேங்கும் பொருட்களை அகற்றி உதவுமாறும் - தண்ணீர் தேங்காதவாறு தமது சுற்றுச்சூழலை பேணுமாறும் யாழ். மாநகர சுகாதார மருத்துவ அதிகாரி கேட்டுள்ளார். (ஐ)

## ரணிலை...

தெரிவித்தவை வருமாறு,

"நேற்றைய தினம் (நேற்று முன்தினம்) ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, தமிழ் தேசிய மக்கள் முன்னணியை தவிர்த்து ஏனைய தமிழ் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர்களை அழைத்து நல்லிணக்கம் தொடர் பாக பேசினார்.

பல மாதங்களுக்கு முன்னரே இது குறித்து பேசப்பட்டது. கடந்த ஆண்டு சுதந்திர தினத்துக்கு முன்னர் இனப்பிரச்னைக்கு தீர்வு எட்டப்படும் என்ற அடிப்படையிலேயே முதல் சுற்று பேச்சு ஆரம்பமானது. ஆனால், தீர்வு வழங்கப்படவில்லை. இந்த சந்திப்பின்போது பாராளுமன்ற தேர்தலின் பின்னர் 13ஆவது திருத்தத்தை முழுமையாக நடைமுறைப்படுத்துமாறு கோரியுள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

சுமார் ஒன்றரை வருடங்களுக்கு முன்னர் ஜனாதிபதி ரணிலால் இந்த பேச்சு ஆரம்பிக்கபட்ட போதே தமிழ் தேசிய மக்கள் முன்னணி இதுவொரு நாடகம் என தெளிவாக மக்களுக்கு எடுத்துக் கூறியிருந்தது. இலங்கை பொருளாதார நெருக்கடி காரணமாக சர்வதேச நாடுகளிடம் கடன் கோரியுள்ளது.

தமிழ் மக்களுக்கு எதிரான போர் காரணமாகவே சர்வதேச நாடுகள் மத்தியில் இலங்கைக்கு பெரும் கடன் ஏற்பட்டுள்ளது. இந்நிலையிலேயே, இனப்பிரச்னைக்கு தீர்ப்பதற்கு திட்டம் வைத்திருப்பதாக சர்வதேச நாடுகளுக்கு எடுத்து காட்டுவதற்கு ஜனாதிபதி ரணில் நாடகம் நடத்தி வருகின்றார்.

ரணில் ஒருபோதும் இந்த பிரச்னையை நேர்மையாக தீர்க்கமாட்டர். சிங்கள மக்களுக்கு உண்மையை கூறினால் இந்த பேச்சில் நம்பிக்கை வைக்கலாம். அதை செய்யாமல் வாருங்கள் பெப்ரவரி நான்காம் திகதி தீர்வை கொடுப்போம் என செல்வது எல்லாம் அப்பட்டமான பொய் கதைகள் ஆகும் - நாங்கள் ஏமாறுவதற்கு தயாரில்லை.

2005ஆம் ஆண்டிலேயே தற்போதைய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை நம்ப வேண்டாம் என தமிழீழ விடுதலைப் புலிகள் தெரிவித்தனர். அப்போது இது குறித்து பலரும் குழம்பினர். அன்று தெரிவித்த தீர்க்கதரிசனத்தை ஜனாதிபதி ரணில் தன்னுடைய செயல்பாடுகளால் நிரூபித்துள்ளார்."
- என்றார்.

ஈழநாடு
Eelanadu

# விசாரணை என்ற போர்வையில் நேரத்தை வீணடிக்கும் ஓ.எம்.பி.!

## பாதிக்கப்பட்டோர் விசனம்

வவுனியா, டிசெ. 23

**விசாரணை என்ற போர்வையில் எமது நேரத்தை வீண்டிப்பதாக காணாமற்போனோர் தொடர்பான அலுவலகத்தின் (ஓ.எம்.பி.) மீது பாதிக்கப்பட்ட உறவுகள் குற்றம் சுமத்தியுள்ளனர்.**

காணாமல் போனவர்களுக்கான அலுவலகத்தின் விசாரணை ஒன்று வவுனியா பிரதேச செயலகத்தில் நேற்று இடம்பெற்றது.

இதில் காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகள் பலர் கலந்துகொண்டு சாட்சியமளித்திருந்தனர்.

குறித்த விசாரணைகளில் கலந்துகொண்ட பாதிக்கப்பட்ட உறவுகள் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையில்-



ஏற்கனவே இந்த அலுவலகத்திற்கு நாம் பல ஆவணங்களை வழங்கியிருக்கின்றோம். இதில் எமக்கு எந்தவித நம்பிக்கையும் இல்லை.

இதுவரை எமது பிள்ளைகள் தொடர்பாக எந்தவித மான பதிலையும் இந்த அலுவலகம் வழங்கவில்லை. அவர்களுக்கு வேலை இல்லாதமையினால் எமது நேரத்தை வீண்டிக்கின்றார்கள்-என்றனர். (அ)

## இலங்கையில் மீண்டும் கொரோனா!

கொழும்பு, டிசெ. 23

ஜே.என்-1 ஒமிக்ரோன் வகை புதிய கொரோனா வைரஸ் திரிபானது இலங்கையிலும் அடையாளம் காணப்பட்டுள்ளதாக ஸ்ரீ ஜயவர்தன புர பல்கலைக் கழகத்தின் ஒவ்வாமை நோய் எதிர்ப்பு மற்றும் உயிரியல் ஆய்வுகூட தலைவரான சந்திம ஜீவந்திர தெரிவித்தார்.

தமது உத்தியோகப்பூர்வ எக்ஸ் தளத்தில் அவர் இந்த தகவலை வெளிப்படுத்தியுள்ளார்.

கொவிட்-19 சோதனைகள் தற்போது குறைந்தளவிலேயே முன்னெடுக்கப்படுவதால், அதன் உண்மையான தரவுகளை பெற முடியாதுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.


எவ்வாறாயினும், கொரோனா வைரஸூக்கு எதிரான நோயெதிர்ப்பு தடுப்பூசிகள் இன்னும் வழங்கப்படுகின்றன.

அதிக பாதிப்பினை எதிர்கொள்ளும் தரப்பினர் பூஸ்டர் தடுப்பூசிகளைப் பெறுவது முக்கியம் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

தொடரும் சீரற்ற காலநிலை காரணமாக டெங்கு காய்ச்சலும் பரவும் நிலையில், தொடர்ச்சியான காய்ச்சல் காணப்படுமானால், அது தொடர்பில், பொது மக்கள் உரிய மருத்துவரை அணுகி ஆலோசனைகளை பெற்றுக்கொள்ளுமாறும் அவர் வலியுறுத்தியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ)

## ஜனாதிபதி வேட்பாளராக களமிறங்குவதற்கு தயார்!

### விக்னேஸ்வரன் அறிவிப்பு



யாழ்ப்பாணம், டிசெ. 23

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுடன் பேசினேன் சரிவராது என தோன்றியதால் விலகினேன் என தமிழ் தேசியக் கூட்டணியின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான சி.வி.விக்னேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

அதேவேளை, தமிழ் கட்சிகள் ஒருமித்து அழைத்தால் பொது வேட்பாளராக ஜனாதிபதி தேர்தலில் போட்டியிடுவது தொடர்பில் பரிசீலிக்கத் தயாராக இருக்கிறேன் எனவும் அவர் கூறினார்.

நேற்று முன்தினம் யாழ் நல்லூர் பகுதியில் அமைந்துள்ள அவரது இல்லத்தில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போது ஊடகவியலாளர் எழுப்பிய கேள்வி ஒன்றுக்கு பதிலளிக்கும் போது அவர் இவ்வாறு கூறினார் .

அவர் மேலும் தெரிவிக்கையில்-

நான் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுடன் இணைந்து செயல்படும்போது சிலர் இவர் ரணிலின் ஆள் என்றனர்.

நான் யாருடைய ஆளுமல்லன். தமிழ் மக்களுக்கு எதையாவது பெற்றுக் கொடுக்க வேண்டும் என முயற்சி செய்தேன். அது நடைபெறவில்லை.

நான் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை தேடிச் செல்லவில்லை. ஜனாதிபதியாகப் பதவியேற்ற பின்னர் பாராளுமன்றத்தில் என்னை அவர் சந்தித்தபோது இணைந்து செயல்பட வருமாறு அழைத்தார்.

ஒரு ஜனாதிபதி அழைப்பு விடுத்தால் மக்களுக்காக சென்று பேசுவது அரசியல் நாகரீகம். நான் கொமிஷன் வேண்டுபவன் அல்லலன்.

சிலர் ஜனாதிபதியுடன் பேசுவதற்கு முன்னரே சரிவராது என கூறுவது சிறுபிள்ளைத்தனம். பேசிப் பார்த்து சரி வராது என்ற பின் விலகுவது அறிவாளித்தனம். அதையே நான் செய்தேன்.

ஜனாதிபதி தேர்தலில் ரணில் விக்கிரமசிங்க ஜனாதிபதி வேட்பாளராக களமிறங்கப் போவதாக பலர் பேசுகின்றனர்.

ரணில் விக்கிரமாசிங்கவை இன்று நேற்று அறிந்தவன் நான் அல்லலன். என்னை விட பத்து வயது இளமை என்றாலும் பாடசாலைக் காலத்திலிருந்து அவரை எனக்கு நன்கு தெரியும்.

சிங்களத் தலைவர்களுடன் ஒப்பிடும் போது இனவாதம் அற்றவர். அவரது குடும்பப் பின்னணி எல்லோருடனும் இணைந்து செயற்படக் கூடிய சூழலை உருவாக்கியுள்ளது.

ஆனால் பல சந்திப்புகளை மேற்கொண்டேன். 13 ஆவது திருத்தம் தொடர்பில் நடைமுறைத் தன்மையை ஆராய்வதற்கு குழு ஒன்றை அமைப்பதற்கு இணங்கினார். ஆறு துறை சார்ந்த நிபுணர்களின் பெயர்களை வழங்கினோன். குழு அமைக்கப்படவில்லை.

தற்போது நடைபெற்ற வரவு-செலவுத் திட்டத்தில் அவர் பேசிய கருத்துக்கள் என்னை வருத்தத்தில் ஆழ்த்தியது.

மாகாண சபையை இல்லாத ஒழித்து மாவட்ட அபிவிருத்திக் குழு ஒன்றின் ஊடாக செயற்பாடுகளை முன்னெடுப்பதற்காக காத்திருக்கிறார். இதனை ஒருபோதும் அனுமதிக்க முடியாது.

13 ஆவது திருத்தத்தை அரசியல் அமைப்பில் இருந்து அகற்றுவதன் மூலம் இந்தியாவின் தலையீட்டை முடிவுக்கு கொண்டு வருவதற்கான முயற்சிகளை ரணில் விக்கிரமசிங்க செய்ய நினைக்கிறார்.

இவ்வாறானவருடன் இணைந்து செயல்பட முடியாது. தமிழ் மக்களும் எந்த ஒரு சிங்கள ஜனாதிபதியிடமும் தமக்கான தீர்வுகளை எதிர்பார்ப்பது கடினமான விடயம்.

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் தமிழ் மக்கள் வாக்களிக்காமல் விடுவது சிறந்ததா அல்லது ஜனாதிபதி வேட்பாளராக தமிழர் ஒருவரை நிறுத்தி எமது பலத்தை கட்டுவது சிறந்ததா என பார்த்தால் தமிழர் ஒருவரை பொது வேட்பாளராக நிறுத்துவது என்பது எனது விருப்பம்.

ஒலிம்பிக்கில் சாதித்த எதிர்வீரசிங்கத்தை தொடர்பு கொண்டு பேசினேன். ஜனாதிபதி வேட்பாளராக வாருங்கள், சிங்கள மக்கள் மத்தியில் உங்களுக்கு மதிப்பு உள்ளது என்றேன். அவர் புற்றுநோயால் பாதிக்கப்பட்டு இருக்கிறேன் இயலாது என்றார்.

நான் அரசியலில் ஈடுபாடு இல்லாமல் இருந்தபோது பலரின் வற்புறுத்தலின் பேரில் மாகாண சபை முதலமைச்சர் வேட்பாளராக வந்தேன் .

வந்த பின் என்னையே அப்புறப்படுத்தும் வேலைகளை எம்மவர்களே செய்தார்கள். மக்களின் ஆதரவினால் தப்பினேன்.

ஆகவே தமிழ் கட்சிகள் இணைந்து எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் தமிழ் மக்கள் சார்ந்து பொது வேட்பாளராக போட்டியிடுமாறு கோரினால் அப்போதைய கள நிலவரங்களைப் பார்த்து பரிசீலனை செய்யத் தயாராக இருக்கிறேன்-என்றார். (அ)

## பாதுகாப்பற்ற கிணற்றில் விழுந்து ஒன்றரை வயது குழந்தை மரணம்!

கிளிநொச்சி, டிசெ. 23

பூநகரி பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட பூநகரி பள்ளிக்கூட பகுதியில் நேற்று முன் தினம் மாலை வீட்டில் விளையாடிக்கொண்டிருந்த பெண் குழந்தை பாதுகாப்பற்ற கிணற்றில் தவறி விழுந்து பரிதாபகரமாக உயிரிழந்துள்ளது.

புஷ்பராசா நிதுசனா என்ற ஒன்றரை வயது நிரம்பிய குழந்தையே இவ்வாறு பரிதாபகரமாக உயிரிழந்துள்ளது.

உயிரிழந்த குழந்தையின் உடல் கிளிநொச்சி வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டது.

இச்சம்பவம் தொடர்பாக பூநகரி பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். (அ)

## கஜேந்திரனின் எம்.பி. பதவியை இரத்துச் செய்ய நடவடிக்கை!

### பிவித்துரு ஹெல உறுமய கூறுகிறது

கொழும்பு, டிசெ. 23

தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் பாராளுமன்ற உறுப்பினர் செல்வராஜா கஜேந்திரனின் பாராளுமன்ற உறுப்பினர் பதவியை இரத்து செய்வதற்கு மேலதிக சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என பிவித்துரு ஹெல உறுமய தெரிவித்துள்ளது.

இது தொடர்பில் பிவிதுரு ஹெல உருமய கட்சியின் பிரசார செயலாளர் அஞ்சன சந்திரசிறி மேலும் தெரிவிக்கையில்-

தமிழ் ஆயுதப் போராட்ட அமைப்பின் உறுப்பினரான திலீபனைக் கொண்டாடும் வகையில் செல்வராஜா கஜேந்திரன் கிழக்கு மாகாணத்தில் இருந்து வடமாகாணத்துக்கு வாகனப் பேரணி ஒன்று ஏற்பாடு செய்திருந்தார். பயங்கரவாத அமைப்பைச் சேர்ந்த ஒருவரைக் கொண்டாடுவதன் மூலம் பிரிவினைவாதத்தை மேம்படுத்துவதற்கு பாராளுமன்ற உறுப்பினர் கஜேந்திரன் நேரடியாக ஆதரவளித்தார்.

அப்படிச் செய்வது அரசியலமைப்புச் சட்டத்தின் 157 (ஏ) பிரிவை கடுமையாக மீறுவதாகும்-என்றார். (அ)

## தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலை; யாழில் இன்று முக்கிய கலந்துரையாடல்

யாழ்ப்பாணம், டிசெ. 23

28 ஆண்டு காலமாக தொடர் சிறை வைக்கப்பட்டுள்ள 14 தமிழ் அரசியல் கைதிகளினதும் மனிதாபிமான விடுதலையை வலியுறுத்தி பொதுவெளியூடாக ஜனாதிபதியிடம் அனைவரும் இணைந்து பொதுவேண்டுகோளை விடுவிப்பது தொடர்பில் ஆராயும் விசேட கலந்துரையாடல் யாழ்ப்பாணத்தில் இன்று இடம்பெறவுள்ளது.

இந்த விசேட கலந்துரையாடல் குரலற்றவர்களின் குரல் அமைப்பின் ஏற்பாட்டில் யாழ்ப்பாணத்தில் உள்ள தந்தை செல்வா கலையரங்கில் இன்று முற்பகல் 10 மணிக்கு இடம்பெறும்.

தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலை தொடர்பான குறித்த கலந்துரையாடலில் பங்குபற்றுமாறு பொது அமைப்புக்கள், சிவில் செயற்பாட்டாளர்களுக்கு குரலற்றவர்களுக்கான குரல் அமைப்பின் ஒருங்கிணைப்பாளர் மு.கோமகன் அழைப்பு விடுத்துள்ளார். (அ)

## கிறிஸ்மஸ் காலத்தில் கேக் விற்பனை வீழ்ச்சி

கொழும்பு, டிசெ. 23

கிறிஸ்மஸ் காலத்தில் கேக் விற்பனை 50 வீதம் குறைந்துள்ளதாக பேக்கரி சங்கத்தின் தலைவர் என்.கே.ஜயவர்தன தெரிவித்தார்.

நாட்டில் தற்போது நிலவும் கடுமையான பொருளாதார நெருக்கடியே அதற்குக் காரணம் என அவர் மேலும் குறிப்பிட்டார்.

கேக்கை கிலோ கணக்கில் கொள்வனவு செய்து வந்த வாடிக்கையாளர்கள் இம்முறை அதனை 250 கிராம் வரை மட்டுப்படுத்தியுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 23.12.2023 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

ஈழநாடு



# தென்னாபிரிக்காவுக்கு எதிரான ஒருநாள் தொடர் இந்தியா வசம்!

பார்ல், டிசெ. 23

தென்னாபிரிக்கா அணிக்கு எதிரான மூன்றாவது மற்றும் கடைசி ஒருநாள் கிரிக்கெட் போட்டியில் இந்திய அணி வெற்றி பெற்றுள்ளது. இதன் மூலம் 2-1 என்ற கணக்கில் தொடரை வென்றுள்ளது

இந்திய கிரிக்கெட் அணி, தென்னாபிரிக்காவில் சுற்றுப்பயணம் மேற்கொண்டு கிரிக்கெட் தொடரில் விளையாடி வருகிறது. முன்னதாக நடைபெற்ற 3 போட்டிகள் கொண்ட இருபது - 20 கிரிக்கெட் தொடர் 1-1 என சமனில் முடிந்தது. இந்நிலையில், கடந்த 17ஆம் திகதி 3 போட்டிகள் கொண்ட ஒருநாள் தொடர் தொடங்கியது. முதல் போட்டியில் இந்தியாவும், இரண்டாவது போட்டியில் தென்னாபிரிக்காவும் வெற்றி பெற்றன. தொடரின் வெற்றியாளரை தீர்மானிக்கும் 3ஆவது மற்றும் கடைசி போட்டி பார்ல் நகரில் நடைபெற்றது.

நாணயச் சுழற்சியில் வென்ற தென்னாபிரிக்க அணி பந்துவீச்சை தெரிவுசெய்தது. இந்திய அணி முதலில் துடுப்பெடுத்தாடி 50 ஓவர்களில் 8 விக்கெட்கள் இழப்புக்கு 296 ஓட்டங்கள் எடுத்தது. 297 ஓட்டங்கள் எடுத்த வெற்றி என்ற இலக்கை விரட்டியது. தொடக்கம் முதலே சீரான இடைவெளியில் தென்னாபிரிக்கா விக்கெட்களை இழந்தது.

ஹென்ரிக்ஸ் 19 ஓட்டங்களிலும், வொன்டர் டூசன் 2 ஓட்டங்களிலும் வெளியேறினர். மார்க்ரம் மற்றும் ஜோர்ஸி இணைந்து 65 ஓட்டங்களுக்கு இணைப்பாட்டம் அமைத்தனர். அந்த கூட்டணியை வாஷிங்டன் சுந்தர் பிரித்தார். மார்க்ரம், 36 ஓட்டங்களில் வெளியேறினார்.

தொடர்ந்து ஜோர்ஸி, கிளாசன், முல்தர், மில்லர், மகாராஜ், வில்லியம்ஸ் ஆகியோர் ஆட்டமிழந்தனர். இதில் கிளாசனின் துடுப்பில்பட்ட பந்தை அபாரமாக பிடியெடுத்து வெளியேற்ற உதவினார் சாய் சுதர்ஷன். 45.5 ஓவர்கள் முடிவில் 218 ஓட்டங்களுக்கு சகல விக்கெட்களையும் இழந்தது தென்னாபிரிக்கா.

அர்ஷ்தீப் சிங், 9 ஓவர்கள் வீசி 30 ஓட்டங்கள் மட்டுமே கொடுத்து 4 விக்கெட்களை கைப்பற்றினார். ஆவேஷ் கான் மற்றும் வாஷிங்டன் சுந்தர் தலா 2 விக்கெட்களும், அக்சர் மற்றும் முகேஷ் தலா ஒரு விக்கெட்டும் கைப்பற்றினர்.

முன்னதாக, இந்திய அணிக்காக சாய் சுதர்ஷன் - ரஜத் பட்டிதார் தொடக்க வீரர்களாகக் களமிறங்கினர். நந்த்ரே பர்கர் வீசிய 5ஆவது ஓவரில் 22 ஓட்டங்களில் போல்ட் ஆனார். ரஜத் படிதார். கடந்த முறை நிலைத்து ஆடிய சாய் சுதர்ஷன் 10 ஓட்டங்களில் எல். பி. டபிள்யூ. முறையில் விக்கெட்டானார். 8 ஓவர் முடிவில் இரண்டு தொடக்க வீரர்களையும் பறிகொடுத்த இந்திய அணி 50 ஓட்டங்களைச் சேர்த்திருந்தது.



சஞ்சு சாம்சன் - கே. எல். ராகுல் இணை கைகோத்து அணியின் ஓட்ட எண்ணிக்கையை உயர்த்த முயன்றனர். ஆனாலும் ராகுல் 21 ஓட்டங்களில் ஆட்டமிழந்தார்.

ஒருபுறம் சஞ்சு சாம்சன் அதிரடி காட்ட திலக் வர்மா உறுதுணையாக இருந்தார். 42ஆவது ஓவரில் 52 ஓட்டங்களுடன் அவரும் கிளம்பினார். 110 பந்துகளை எதிர்கொண்ட சஞ்சு சாம்சன் சர்வதேச போட்டியில் தனது முதல் சதத்தை பதிவு செய்து அசத்தினார். ஆனால், லிசாட் வில்லியம்ஸ் வீசிய 46-வது ஓவரில் பிடி கொடுத்து 108 ஓட்டங்களுடன் வெளியேறினார். அதற்கு பின் வந்த அக்சர் பட்டேல் வழக்கம் போல நிலைக்காமல் ஓர் ஓட்டத்துடன் பெவிலியன் திரும்ப, அவரைத் தொடர்ந்து வாஷிங்டன் சுந்தர் 14 ஓட்டங்களிலும், ரிங்கு சிங் 38 ஓட்டங்களிலும் ஆட்டமிழந்தனர். நிர்ணயிக்கப்பட்ட 50 ஓவர் முடிவில் 8 விக்கெட்களை இழந்த இந்திய அணி 296 ஓட்டங்களை சேர்த்தது.

தென்னாபிரிக்க அணி தரப்பில் பியூரன் ஹென்ட்ரிக்ஸ் 3 விக்கெட்களையும், நந்த்ரே பர்கர் 2 விக்கெட்களையும், லிசாட் வில்லியம்ஸ், கேசவ் மகாராஜ், வியன் முல்தர் ஆகியோர் தலா 1 விக்கெட்களையும் வீழ்த்தினர். (ஐ)



## அவசரமாக இந்தியாவுக்கு திரும்பினார் விராட் கோலி

புதுடில்லி, டிசெ. 23

இந்தியா - தென்னாபிரிக்கா இடையே வரும் திங்கட்கிழமை பொக்சிங் டே டெஸ்ட் போட்டி ஆரம்பமாகிறது. இந்த நிலையில், விராட் கோலி, 'குடும்ப பிரச்னை' காரணமாக அவசரஅவசரமாக இந்தியா திரும்பினார்.

நேற்றைய தினம் இவர் தென்னாபிரிக்காவில் இருந்து இந்தியா சென்றிருந்தார்.

தென்னாபிரிக்கா சென்ற இந்திய அணி ஒருநாள், இருபது - 20 தொடர்களில் விளையாடியது. இதில், இருபது - 20 தொடர் சமநிலையில் முடிவடைந்தது. ஒருநாள் தொடரை இந்தியா கைப்பற்றியது. இந்தப் போட்டிகளில் விராட் கோலி உள்ளிட்ட மூத்த வீரர்களுக்கு ஓய்வு அளிக்கப்பட்டிருந்தது.

இந்த நிலையில், வரும் திங்கட்கிழமை தொடங்க விருந்த டெஸ்ட் தொடரில் விராட் கோலி பங்கேற்க விருந்தார். இந்நிலையிலேயே அவர் அவசரமாக இந்தியா திரும்பினார்.

தென்னாபிரிக்காவில் இந்திய அணி டெஸ்ட் தொடர் ஒன்றைக்கூட வென்றதில்லை. இம்முறை தென்னாபிரிக்க அணி நட்சத்திர வீரர்கள் இல்லாத அணியாக உள்ளது. இதனால், இந்தியா இலகுவாக இந்தத் தொடரை வெல்லும் வாய்ப்பு இருந்தது. இந்நிலையில், விராட் கோலி இந்தியா திரும்பினார். அவர் டெஸ்ட் தொடரில் பங்கேற்காமல் போனால் அந்த அணிக்கான பின்னடைவாக அமையும் என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

## சச்சினின் சாதனையை தகர்த்தார் சர்கார்

சச்சின் டெண்டுல்கரின் 14 ஆண்டுகால சாதனையை பங்களாதேஷ் வீரர் சௌமிய சர்கார் முறியடித்துள்ளார்.

பங்களாதேஷ் அணி நியூசிலாந்தில் சுற்றுப்பயணம் மேற்கொண்டு 3 ஒருநாள் மற்றும் 3 ரி - 20 போட்டிகளில் விளையாடி வருகிறது.

இரு அணிகளும் முதலில் ஒருநாள் தொடரில் விளையாடி வருகின்றன. இரண்டாவது ஒருநாள் போட்டியில் பங்களாதேஷ் அணியின் தொடக்க ஆட்டக்காரர் சௌமிய சர்கார் அதிரடியாக 151 பந்துகளில் 169 ஓட்டங்கள் எடுத்து அசத்தினார். இதில் 22 பௌண்ட்ரிகள் மற்றும் 2 சிக்ஸர்கள் அடங்கும். இதன் மூலம், புதிய சாதனை ஒன்றையும் அவர் படைத்துள்ளார்.




இந்தியத் துணைக் கண்டத்திலிருந்து நியூசிலாந்தில் ஒருநாள் போட்டி ஒன்றில் அதிக ஓட்டங்கள் குவித்த வீரர் என்ற சாதனையை அவர் படைத்தார். இதற்கு முன்னதாக, கடந்த 2009 ஆம் ஆண்டு சச்சின் டெண்டுல்கர் 163 ஓட்டங்கள் எடுத்திருந்ததே அதிகபட்சமாக இருந்தது. அந்த சாதனையை சௌமிய சர்கார் 14 ஆண்டுகளுக்குப் பிறகு முறியடித்துள்ளார். (ஐ)

## ஓய்வு பெறுகிறார் டீன் எல்கர்!

கேப்டவுன், டிசெ. 23

இந்தியாவுக்கு எதிரான டெஸ்ட் தொடருடன் தென்னாபிரிக்காவின் முன்னணி வீரரான டீன் எல்கர் ஓய்வு பெறவுள்ளார் என்று தகவல் வெளியாகியுள்ளது.



இந்திய கிரிக்கெட் அணி தென்னாபிரிக்கா வந்துள்ளது. அங்கு, 3 ரி -20, 3 ஒருநாள் மற்றும் 2 டெஸ்ட் போட்டிகள் கொண்ட தொடரில் பங்கேற்கிறது. ரி - 20 தொடர் சமநிலையிலும் ஒருநாள் தொடர் இந்தியா வசமும் ஆகியுள்ளது. இந்த நிலையில், டெஸ்ட் தொடர் திங்கட்கிழமை ஆரம்பமாகிறது.

இந்த டெஸ்ட் தொடருடன் சர்வதேச கிரிக்கெட்டில் இருந்து தென்னாபிரிக்க முன்னணி வீரர் டீன் எல்கர் ஓய்வு பெறவுள்ளார் என்று தகவல் வெளியாகியுள்ளது.

டீன் எல்கர் தென்னாபிரிக்கா அணிக்காக இதுவரை 84 டெஸ்ட் போட்டிகளில் ஆடி 5,146 ஓட்டங்களும், 8 ஒருநாள் போட்டிகளில் ஆடி 104 ஓட்டங்களும் எடுத்துள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

# மேற்கிந்தியாவுடனான ரி-20 இங்கிலாந்து அணி வெற்றி!

தாரூபா, டிசெ. 23

மேற்கு இந்தியத் தீவுகள் அணிக்கு எதிரான 4ஆவது இருபது - 20 கிரிக்கெட் போட்டியில் பில் சால்ட்டின் அதிரடி சதத்தால் இங்கிலாந்து அணி 75 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது.

தாரூபாவில் நடைபெற்ற இந்த ஆட்டத்தில் முதலில் துடுப்பெடுத்தாடிய செய்த இங்கிலாந்து அணி 20 ஓவர்களில் 3 விக்கெட்கள் இழப்புக்கு 267 ஓட்டங்கள் குவித்தது. தனது 2ஆவது சதத்தை அடித்த தொடக்க வீரரான பில் சால்ட் 57 பந்துகளில், 10 சிக்ஸர்கள், 7 பௌண்ட்ரிகளுடன் 119 ஓட்டங்கள் விளாசினார்.

அவருக்கு உறுதுணையாக விளையாடிய அணித் தலைவர் ஜோஸ் பட்லர் 29 பந்துகளில், 3 சிக்ஸர்கள், 6 பௌண்ட்ரிகளுடன் 55 ஓட்டங்கள் விளாசிய நிலையில் ஜசன் ஹோல்டர் பந்தில் ஆட்டமிழந்தார்.

வில் ஜேக்ஸ் 9 பந்துகளில், 2 சிக்ஸர்கள், 2 பௌண்ட்ரிகளுடன் 24 ஓட்டங்கள் எடுத்து அகீல் ஹொசைன்



பந்தில் எல். பி. டபிள்யூ ஆனார். லியாம் லிவிங்ஸ்ரன் 21 பந்துகளில், 4 பௌண்ட்ரிகள், 4 சிக்ஸர்களுடன் 54 ஓட்டங்களும், ஹாரி புரூக் 6 ஓட்டங்களும் சேர்த்து ஆட்டமிழக்காமல் இருந்தனர்.

சர்வதேச இருபது - 20 போட்டிகளில் இங்கிலாந்து அணியின் அதிகபட்ச ஓட்டக் குவிப்பாக இது அமைந்தது. இதற்கு முன்னர் அந்த அணி 2019ஆம் ஆண்டு நியூசிலாந்துக்கு எதிராக 241 ஓட்டங்கள் எடுத்திருந்தது.

268 ஓட்டங்கள் இலக்குடன் துடுப்பெடுத்தாடிய மேற்கு இந்தியத் தீவுகள் அணி 15.3 ஓவர்களில் 192 ஓட்டங்கள் சேர்த்து அனைத்து விக்கெட்களையும் இழந்தது.

அதிகபட்சமாக அந்த்ரே ரஸல் 51, நிக்கோலஸ் பூரன் 39, ஷெர்பான் ருதர்போர்ட் 36, ஷாய் ஹோப் 16 ஓட்டங்கள் சேர்த்தனர்.

இங்கிலாந்து தரப்பில் ரீஸ் டாப்லி 3 விக்கெட்களையும் சாம் கரன், ரெஹான் அகமது ஆகியோர் தலா 2 விக்கெட்களையும் கைப்பற்றினர்.

75 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்ற இங்கிலாந்து அணி 5 போட்டிகள் கொண்ட இருபது - 20 கிரிக்கெட் தொடரை 2-2 என்ற கணக்கில் சமநிலை பெற்றுள்ளது.

# சூயஸ் கால்வாய் வழியேயான ஆசியா - ஐரோப்பா கடல்வழி வர்த்தகத்தில் புதிய சிக்கல்!

இஸ்ரேலுக்கும் ஹமாஸுக்கும் இடையே நடக்கும் போரின் விளைவுகள் காஸா பகுதிக்கு அப்பாலும் எதிரொலிக்கத் தொடங்கியிருக்கின்றன.

கடந்த அக்டோபர் 7-ஆம் தேதி இஸ்ரேலுக்கு எதிராக ஹமாஸ் ஆயுதக்குழு நடத்திய தாக்குதலுக்குப் பிறகு மத்திய கிழக்கில் பெரும் மோதல் வெடித்தது.

கடந்த சில வாரங்களாக, செங்கடல் பகுதி இந்த மோதலின் நீட்சியாக மாறியுள்ளது.

2015-ஆம் ஆண்டு முதல் செங்கடலின் வாயிலில் இருக்கும் யேமனைக் கட்டுப்படுத்த ஹூதி கிளர்ச்சியாளர்கள் முயன்றுவருகிறார்கள்.

தற்போது அவர்கள் சூயஸ் கால்வாய் வழியாக கிழக்கிலிருந்து மேற்கு நோக்கிச் செல்லும் சரக்குக் கப்பல்களை ஏவுகணைகள் மற்றும் ட்ரோன்கள் ஏவி தாக்கத்தொடங்கியுள்ளனர்.

ஹமாஸுக்கு ஆதரவு தெரிவித்திருக்கும் ஹூதி கிளர்ச்சியாளர்கள், இஸ்ரேலுக்கு அனுப்பப்படும் கப்பல்களை மட்டும் குறிவைத்து தாக்குவதாகத் தெரிவித்துள்ளனர்.

இதனால் எண்ணெய் உலகின் பெரும் நிறுவனமான பிரிட்டிஷ் பெட்ரோலியம், மற்றும் உலகின் பெரும் கப்பல் நிறுவனங்களான மத்தியத் தரைக்கடல் கப்பல் நிறுவனம், மேர்ஸ்க் உள்ளிட்ட ஐந்து பெரிய நிறுவனங்கள் சூயஸ் கால்வாய் வழியே கப்பல்களை இயக்குவதை தற்போதைக்கு நிறுத்துவதாக அறிவித்துள்ளன.




தங்கள் பணியாளர்கள், கப்பல்கள் மற்றும் சரக்குகளைப் பாதுகாக்க மிக நீளமான மாற்று வழியைப் பயன்படுத்தும் நிர்பந்தத்திற்கு உள்ளாகியிருக்கின்றன.

இது உலக வர்த்தகத்தை மிகப்பெரும் அளவில் பாதிக்கும் என்று வல்லுநர்கள் எச்சரித்துள்ளனர்.

ஏன்? என்பபதை இந்த ஐந்து தகவல்கள் உங்களுக்கு விளக்கும்.

**1. சூயஸ் கால்வாய் - எப்போது, எப்படி கட்டப்பட்டது?**

சூயஸ் கால்வாய் என்பது ஆசியாவிலிருந்து ஆப்ரிக்காவைப் பிரிக்கும் குறுகிய நிலப்பரப்பான எகிப்து சூயஸ் இஸ்த்மஸை வடக்கு-தெற்காகக் கடக்கும் ஒரு நீர்வழி.

சராசரியாக 193 கி.மீ. நீளமும் 22 மீ ஆழமும் கொண்ட இந்த கால்வாய் மத்தியதரைக் கடலையும் செங்கடலையும் கிட்டத்தட்ட ஒரு நேர்கோட்டில் இணைக்கிறது. சுமார் 12 முதல் 16 மணி நேர பயணத்தில் இணைக்கிறது.

கால்வாயின் கட்டுமானம் 1859-இல் துவங்கியது. இந்தத் திட்டம் பிரெஞ்சு இராஜதந்திரி ஃபெர்டினாண்ட் த லெசெப்ஸால் முன்னெடுக்கப்பட்டது. அவர் இரு கடல்களையும் இணைப்பது சாத்தியம் என்று எகிப்தின் வைஸ்ராயாக இருந்த அவரது முன்னாள் மாணவரான பாஷா மெஹ்மத் சையதை நம்பவைத்தார். இது பொருளாதார ரீதியாகவும் லாபகரமானதாக இருக்கும் என்றும் அவர் கூறினார்.

ஆனால், இந்த இரண்டு கடல்களையும் இணைக்க நீர்ப்பாதையைத் திறக்கும் யோசனை எகிப்தின் புராதன மன்னர்களான ஃபாரோக்களின் காலத்திலிருந்தே இருந்தது.

10 ஆண்டுகாலப் பணிகளுக்குப் பிறகு, 1869-ஆம் ஆண்டில் கால்வாய் திறக்கப்பட்டது. அப்போது அது 8மீ ஆழமும், அடிப்பகுதியில் 22மீ அகலமும், மேற்பரப்பில் 61மீ முதல் 91மீ அகலமும் கொண்டிருந்ததாக பிரிட்டானிக்கா கலைக்களஞ்சியம் கூறுகிறது.

கால்வாய் பயன்பாட்டிற்கு வந்த முதல் ஆண்டுகளில், அதன் குறுகல் மற்றும் வளைவு காரணமாக சுமார் 3,000 கப்பல்கள் தரைதட்டின. இதனால் அடுத்தடுத்த ஆண்டுகளில் பல விரிவாக்கங்கள் மேற்கொள்ளப்பட்டன.

கால்வாயின் நிர்வாகம் ஒரு நிறுவனங்களின் கைகளில் தரப்பட்டன. இதில் பிரான்ஸ் பெரும்பான்மையான பங்குகளை (52வீதம்) வைத்திருந்தது. மீதம் எகிப்திடம் இருந்தது.

பொருளாதாரச் சிக்கல்களால் எகிப்து தனது பங்கை விற்றது. இதன் மூலம் பிரிட்டன் இந்த நிறுவனத்துக்குள் நுழைந்தது.

தற்போது, எகிப்திய நிறுவனமான சூயஸ் கால்வாய் ஆணையம் கால்வாயை நிர்வகிக்கிறது, இயக்குகிறது, பயன்படுத்துகிறது, பராமரிக்கிறது, மற்றும் மேம்படுத்துகிறது.



**2. உலக வர்த்தகத்தில் சூயஸ் கால்வாயின் முக்கியத்துவம்**

சூயஸ் கால்வாய், ஐரோப்பாவையும் ஆசியாவையும் மிக விரைவாக இணைக்கும் வழி. ஆசியா - ஐரோப்பா கடல்வழி வர்த்தகத்தின் உயிர் நாடி என்றே இதனை கூறலாம்.

இதை இப்படி விளக்கலாம்.

தாய்வானிலிருந்து நெதர்லாந்துக்குச் செல்லும் ஒரு சரக்குக் கப்பல், சூயஸ் கால்வாய் வழியைப் பயன்படுத்தினால், 10,000 கடல் மைல்களை (18,250 கி.மீ) கடக்க 25 நாட்கள் ஆகும்.

ஆனால் இதே கப்பல் ஆப்பிரிக்காவின் நன்னம்பிக்கை முனையைச் சுற்றி வர வேண்டும் என்றால், அது 13,500 கடல் மைல்கள் (25,002 கி.மீ.) பயணிக்க வேண்டும். அதற்கு 34 நாட்கள் ஆகும், என்று கடல்சார் வர்த்தக விவகாரங்களில் நிபுணத்துவம் பெற்ற வெசன் நாட்டிகல் நிறுவனம் விளக்குகிறது.

சூயஸ் கால்வாய் உலகின் மிகவும் பரபரப்பான நீர்வழிப் பாதைகளில் ஒன்றாகும், தினமும் சுமார் 50 கப்பல்கள் அதைக் கடக்கின்றன.

2022-ஆம் ஆண்டில், 22,000-க்கும் மேற்பட்ட கப்பல்கள் இதைப் பயன்படுத்தின. அதாவது, சர்வதேச சரக்கு போக்குவரத்தின் 12 வீதம் சூயஸ் கால்வாய் வழியாகத் தான் சென்றது என்று டாவோஸில் உள்ள உலக பொருளாதார மன்றம் தெரிவித்துள்ளது.

**3. சர்ச்சைகள், போர்கள்**

சமீபத்திய தசாப்தங்களில் சூயஸ் கால்வாய் சர்வதேச சர்ச்சைகளுக்கு உள்ளானது.

இவற்றில் மிக முக்கியமானது 1956-இல் நிகழ்ந்தது. இது ஒரு சிறு போரில் முடிந்தது. அதுவரை சூயஸ் கால்வாயைக் கட்டுப்படுத்திய சக்திகள் இதில் பங்கேற்றன. ஒருபுறம் பிரான்ஸ், பிரிட்டன், மற்றும் இஸ்ரேல். மறுபுறம் எகிப்து.

**அந்த ஆண்டு ஜூலை**



அப்போது அஸ்வான் அணை கட்டுவதற்கு எகிப்திடம் நிதி இருக்கவில்லை. அமெரிக்காவும் இங்கிலாந்தும் உதவ மறுத்துவிட்டன. அதனால், நிதி திரட்ட அப்போதைய எகிப்திய ஜனாதிபதி கமல் அப்தெல் நாசர் சூயஸ் கால்வாயை தேசியமயமாக்கினார். இதனால் ஒரு பெரும் நெருக்கடி எழுந்தது.

கடல்வழி வர்த்தகம் தொடர்வதை உறுதி செய்வதற்காக, குறிப்பாக பாரசீகஃஅரேபிய வளைகுடாவிலிருந்து எண்ணெய் வரத்தினை உறுதி செய்வதற்காக, இஸ்ரேல், பிரான்ஸ் மற்றும் பிரிட்டன் ஆகிய நாடுகள் தங்களது துருப்புகளை அனுப்பி எகிப்தை ஆக்கிரமிக்கப் போவதாக அச்சுறுத்தின.

இந்த மூன்று நாடுகளின் நடவடிக்கையை அமெரிக்காவும் சோவியத் யூனியனும் எதிர்த்தன, பின்வாங்க வலியுறுத்தின. இது பிரான்ஸ் மற்றும் பிரிட்டனுக்கு பெரிய பின்னடைவாக அமைந்தது.




ஐக்கிய நாடுகள் சபையில், கால்வாய் சிக்கல்கள் இல்லாமல் தொடர்ந்து இயங்குவதை உறுதிசெய்ய ஒரு குழுவை அனுப்ப முடிவு செய்யப்பட்டது.

அதே, 1956-ஆம் ஆண்டு, சூயஸ் கால்வாய் ஆணையம் நிறுவப்பட்டது.

**4. எட்டு ஆண்டுகள் மூடப்பட்டிருந்த கால்வாய்**

இது நடந்து 10 ஆண்டுகள் கழித்து சூயஸ் கால்வாய் மற்றொரு போரின் மையமாக இருந்தது.

ஆனால் இம்முறை கால்வாயின் வழியே சரக்கு போக்குவரத்து எட்டு ஆண்டுகள் தடைபட்டது.

1967-ஆம் ஆண்டு ஜூன் மாதம், எகிப்து, சிரியா மற்றும் ஜோர்டான் படைகள் இஸ்ரேலுக்கு எதிரான தாக்குதலைத் துவங்கின. கால்வாயைக் கடந்து சென்று கொண்டிருந்த 15 கப்பல்கள் இந்தத் தாக்குதலில் சிக்கியதால், அவற்றால் பயணத்தைத் தொடர முடியவில்லை.

இக்கப்பல்களில் ஒன்று ஒரு இஸ்ரேலிய வீரரால் மூழ்கடிக்கப்பட்டது. மீதமுள்ளவை கால்வாயின் ஒரு ஏரியில் நங்கூரமிட்டன.

இந்த மோதல் ஒரு வாரம் கழித்து முடிவுக்கு வந்தது, அதனால் ‘ஆறு நாள் போர்’ என்று அழைக்கப்படுகிறது.

இருந்தும் 1975 வரை கப்பல் போக்குவரத்து மீண்டும் தொடங்கவில்லை.

சினாய் தீபகற்பத்தை இஸ்ரேல் கைப்பற்றியது. இஸ்ரேல் அதைப் பயன்படுத்துவதைத் தடுக்க எகிப்து, கால்வாயின் தனது பக்கத்தில் பல கப்பல்களை மூழ்கடித்து வழியை அடைத்தது.

1973-இல் நடந்த யோம் கிப்பர் போருக்குப் பிறகு எகிப்துக்கும் இஸ்ரேலுக்கும் இடையிலான சமாதானப் பேச்சுவார்த்தைகள் நடந்தன. 1975-இல் சூயஸ் கால்வய் மீண்டும் திறக்கப்பட்டது.

**5. சூயஸ் கால்வாய்க்கு மாற்று உண்டா?**



தற்போதைய மோதலுக்கு முன், 2021-ஆம் ஆண்டின் தொடக்கத்தில் கால்வாயில் சிக்கிய, 400 மீ நீளமும் 60 மீ அகலமும் கொண்ட, எவர் கிவன் என்ற கப்பல் விபத்துக்குள்ளாகி சூயஸ் கால்வாயை அடைத்துக் கொண்டது.

அப்போதுதான் பலரும் இந்தப் பாதைக்கு மாற்று உள்ளதா எனத் தேடத் துவங்கினர்.

இஸ்ரேல் மற்றும் ஐக்கிய அரபு அமீரகம் இஸ்ரேலிய துறைமுகமான எய்லாத் (நுடையவ)-இலிருந்து, நெகெவ் (நேபநஎ) பாலைவனம் வழியாக மத்திய தரைக் கடல் வரை ஒரு புதிய கால்வாய் கட்டுவதற்கான சாத்தியத்தை முன்வைத்தன.

ஆனால் அத்திட்டத்திற்கு ஆகியிருக்கக் கூடிய பெரும் செலவு அதைச் சாத்தியமற்றதாக ஆக்குகியது.

சினாய் தீபகற்பத்தின் கிழக்கு முனையில் தோராயமாக 250கி.மீ. நீளமுள்ள கால்வாய்களைத் தோண்டி, நூற்றுக்கணக்கான மீட்டர் உயரமுள்ள மலைகளை வெட்டுவதற்கு, 100 பில்லியன் அமெரிக்க டாலர்களுக்கும் அதிகமான முதலீடு தேவைப்படும் என்று நிபுணர்கள் நம்புகின்றனர்.

லண்டன்-இஸ்தான்புல்-பெய்ஜிங் ரயில் பாதையை ‘புதிய பட்டுப்பாதை’ திட்டத்தில் இணைக்கும் யோசனையை சீனா மற்றும் துருக்கி முன்வைத்தன. ஆனால் அதன் சாத்தியம் மற்றும் லாபம் குறித்தும் பல சந்தேகங்கள் உள்ளன.

இந்த காரணங்களால், சூயஸ் கால்வாய் தான் இப்போதைக்கு இருக்கும் ஆகச் சிறந்த வழி என்பதை தெளிவாகிறது. எனவே, அதை விரிவாக்கும் எகிப்தின் முடிவு கப்பல் நிறுவனங்களிடம் நல்ல வரவேற்பைப் பெற்றுள்ளது.

# இலங்கையில் 4 நாட்களில் 8,000 பேர் கைது, கோடிக்கணக்கான சொத்துக்கள் பறிமுதல்!

**ரஞ்சன் அருண் பிரசாத்**



இலங்கையில் அதிகரித்துள்ள போதைப்பொருள் மற்றும் திட்டமிட்ட குற்றங்களை கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வரும் நோக்கில் "யுக்திய" என்ற பெயரில் விசேட சோதனை நடவடிக்கைகளை இலங்கை போலீசார் ஆரம்பித்துள்ளனர்.

இடைக்கால போலீஸ் மாஅதிபராக தேசபந்து தென்னக்கோன் பதவியேற்று, ஓரிரு தினங்களிலேயே இந்த சோதனை நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

நாடு தழுவிய ரீதியில் போலீஸார் 24 மணிநேர சோதனைகளை நடாத்தி வருகின்றனர்.

இந்த சோதனை நடவடிக்கைகளின் ஊடாக, இதுவரை 8,000-திற்கும் அதிகமானோர் கைது செய்யப்பட்டுள்ளதாக போலீஸ் தரப்பு தகவல்கள் தெரிவிக்கின்றன.

நிழல் உலக கோஷ்டிகளை கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வரும் நடவடிக்கைகளின் போது, எந்தவொரு அழுத்தத்திற்கும் அடிபணிய போவதில்லை என பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் டிரான் அலஸ் தெரிவிக்கின்றார்.

"பயங்கரவாத யுத்தம் இடம்பெற்ற காலப் பகுதியில் போலீஸார் மற்றும் முப்படைகளுடன் இணைந்து பொது மக்கள் ஒத்துழைப்புடன் செயற்பட்டார்கள். நாடு தற்போது யுத்தத்திற்கு சமமாக ஒரு நிலைமையையே எதிர்நோக்கியுள்ளது. பேசிக் கொண்டு மாத்திரம் இருக்காது, இந்த வேலைத்திட்டத்தை நாடு முழுவதும் செயற்படுத்தியுள்ளோம்," என்கிறார் டிரான் அலஸ்.



மேலும், "இந்த உண்மையான தேடுதல் நடவடிக்கைகளுக்கு பொதுமக்கள் ஒத்துழைப்பு வழங்க வேண்டும். எமக்கு கிடைக்கும் அனைத்து விதமான தகவல்கள் குறித்தும் நாம் ஆராய்ந்து பார்ப்போம். சட்டத்தை சரியான முறையில் நடைமுறைப்படுத்த நாம் நடவடிக்கை எடுப்போம்," என அவர் கூறுகின்றார்.

"தமது குழந்தைகள், குடும்பம் தொடர்பில் சிந்தித்து, இந்த பேரழிவிற்கு ஒத்துழைப்பு வழங்க வேண்டாம் என கோரிக்கை விடுக்கின்றேன். இனிவரும் காலங்களில் இவ்வாறான நடவடிக்கைகளுக்கு பொலீஸாரிடத்திலிருந்து எந்தவித மன்னிப்பும் கிடையாது. சட்டவிரோத ஆயுதங்களை வைத்திருப்போர் தொடர்பிலும் இவ்வாறான நடவடிக்கைகளே எடுக்கப்படும். போலீஸாருக்கு எதிராகவோ அல்லது வேறு ஏதேனும் குற்றங்களுக்காக அந்த ஆயுதங்களை பயன்படுத்துவதற்கு முன்னதாகவே போலீஸார் தமது ஆயுதங்களை பயன்படுத்த வேண்டி ஏற்படும்," என்கிறார் அவர்.

"இந்தச் சோதனைகள் தொடர்ந்து நடக்கும். தமது குழந்தைகள், சகோதரர்கள், சகோதரிகள் என குடும்பத்தின் மீது அன்பு கொண்ட அனைவரும் இந்த நடவடிக்கைகளுக்கு ஒத்துழைப்பு வழங்க ஒன்றிணையுமாறு கோரிக்கை விடுக்கின்றேன்," என பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் டிரான் அலஸ் தெரிவிக்கின்றார்.

### தொடர் கைது நடவடிக்கைகள்

நாட்டில் நிலைக்கொண்டுள்ள குற்றங்கள் மற்றும் போதைப்பொருட்களை கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வரும் நோக்கில் "யுக்திய" என்ற பெயரில் விசேட வேலைத்திட்டமொன்று ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இந்த வேலைத்திட்டத்திற்கு அமைய, கடந்த சில நாட்களாக 24 மணிநேர தொடர் தேடுதல் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இந்த நடவடிக்கைகளின் ஊடாக, நேற்று முன்தினம் அதிகாலை 12.30 மணியுடன் நிறைவடைந்த 24 மணித்தியாங்களில் மாத்திரம் 2,008 பேர் கைது செய்யப்பட்டிருந்தனர்.

இந்த நிலையில், யுக்திய வேலைத்திட்டம் ஆரம்பிக்கப்பட்ட கடந்த 17-ஆம் தேதி முதல் புதன் அதிகாலை 12.30 மணியுடன் நிறைவடைந்த காலப் பகுதி வரை 6,583 பேர் கைது செய்யப்பட்டிருந்ததாக பொலீஸ் ஊடகப் பேச்சாளர் அலுவலகம் தெரிவித்திருந்தது.

இவ்வாறு கைது செய்யப்பட்டவர்களில் பல சந்தேகநபர்கள் தடுத்து வைக்கப்பட்டு விசாரணைக்கு உட்படுத்தப்பட்டு வருவதாக பொலீஸார் குறிப்பிடுகின்றனர்.

அத்துடன், மேலும் பல சந்தேக நபர்களை புனர்வாழ்வு மத்திய நிலையங்களுக்கு அனுப்பி வைக்க பொலீஸார் நடவடிக்கை எடுத்துள்ளனர்.

மேலும், திட்டமிட்ட குற்றங்களில் ஈடுபடும் குழுக்கள் மற்றும் போதைப்பொருள் வர்த்தகத்துடன் தொடர்புடைய குழுக்களுக்கு சொந்தமான சொத்துக்களை போலீஸார் தமது பொறுப்பிற்கு எடுத்துள்ளனர்.

பேருந்துகள், கார்கள், வேன்கள், மோட்டார் சைக்கிள்கள், வீடுகள், தங்காபரணங்கள், பணம் உள்ளிட்ட சொத்துக்களை போலீஸார் தமது பொறுப்பிற்கு எடுத்துள்ளனர்.

இந்த தேடுதல் நடவடிக்கைகளின் போது கோடிக்கணக்கான ரூபாய் பெறுமதிமிக்க சொத்துக்களை பொலீஸார் தமது பொறுப்பிற்கு எடுத்துள்ளதுடன், இந்த சொத்துக்கள் தொடர்பிலான விசாரணைகளையும் ஆரம்பித்துள்ளனர்.





### புதிய சோதனை நடவடிக்கைகளின் நோக்கம்

போதைப்பொருள் வர்த்தகத்தைக் கட்டுப்படுத்தி, திட்டமிட்ட குற்றங்களில் ஈடுபடும் வலையமைப்பை வீழ்த்துவதே, போலீஸ் திணைக்களத்தினால் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ள இந்த தேடுதல் நடவடிக்கைகளின் நோக்கம் என போலீஸ் ஊடகப் பேச்சாளர் சிரேஷ்ட பொலீஸ் அத்தியட்சகர் சட்டத்தரணி நிஹால் தல்துவ தெரிவிக்கின்றார்.

"இந்த யுக்திய தேடுதல் நடவடிக்கை கடந்த 17-ஆம் தேதி ஆரம்பிக்கப்பட்டது. பொலீஸ் திணைக்களத்தின் முழுமையான படையணி இதற்காக ஈடுபடுத்தப்பட்டுள்ளது. போதைப்பொருள் வலை



யமைப்பை இல்லாதொழிப்பதே எமது திட்டம். இந்த தேடுதல் நடவடிக்கை தொடர்ச்சியாக முன்னோக்கி கொண்டு செல்லப்படும்," என்கிறார் நிஹால் தல்துவ.

"இந்த போதைப்பொருள் வலையமைப்பில் இதற்கு முன்னர் நாம் அடையாளம் கண்டுக்கொண்ட நபர்கள் இருக்கிறார்கள். அவர்கள் இன்றும் அந்த நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகின்றனர். அவர்களை இலக்காகக் கொண்டு இந்தச் சோதனைகளை முன்னெடுத்து வருகின்றோம். இந்த வலையமைப்பை வீழ்த்தி, போதைப்பொருளுக்கு அடிமையாகியுள்ளவர்களுக்கு புனர்வாழ்வு வழங்குவது இந்த திட்டத்தின் நோக்கமாகும். அதேபோன்று, இந்த நடவடிக்கைகளை முன்னெடுக்கும் சந்தர்ப்பத்தில், திட்டமிட்ட குற்றங்களில் ஈடுபடும் குற்றவாளிகளை கைது செய்யும் இயலுமை கிடைக்கும்," என்கிறார்.

"அதன்பின்னர், நிலைமையைக் கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வருவதற்கான இயலுமை எமக்கு கிடைக்கும். கைது செய்யப்படும் நபர்களிடமிருந்து கிடைக்கும் தகவல்களை அடிப்படையாகக் கொண்டு நாம் எதிர்கால தேடுதல்களை முன்னெடுப்போம்," என பொலீஸ் ஊடகப் பேச்சாளர் கூறினார்.

### இதுவரை நடந்த தேடுதல்கள் என்ன செய்தன?

போதைப்பொருள் ஒழிப்பு மற்றும் திட்டமிட்ட குற்றச் செயல்களின் ஈடுபடுவோரை கைது செய்வதற்கு இதற்கு முன்னரும் பல்வேறு சந்தர்ப்பங்களில் இவ்வாறான வேலைத்திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டிருந்தன.

2005-ஆம் ஆண்டு ஆட்சிக்கு வந்த ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஸ தலைமையிலான அரசாங்கத்தினால் "போதைக்கு முற்றுப்புள்ளி" என வேலைத்திட்டம் ஆரம்பிக்கப்பட்டிருந்தது. இந்த திட்டத்தின் கீழ் போலீஸாரினால் 'ஒபரேஷன் க்ளீன் அப்' தேடுதல் நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டிருந்தன.

அதன்பின்னர், 2015-ஆம் ஆண்டு ஆட்சிக்கு வந்த ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, போதைப்பொருளுக்கு எதிராக கடுமையான நடவடிக்கைகளை எடுத்திருந்தார்.

கடல் மார்க்கமாக நாட்டிற்குள் கொண்டு வர முயற்சித்த பெருந்தொகையான போதைப்பொருட்களை அரச புலனாய்வு பிரிவு, போலீஸ் போதைப்பொருள் தடுப்பு பிரிவு மற்றும் கடற்படையினர் இணைந்து முன்னெடுத்திருந்தனர்.

இந்த திட்டத்தின் கீழ் வெளிநாடுகளில் தலைமறைவாகி, பாரியளவிலான போதைப்பொருள் வர்த்தகத்தில் ஈடுபட்டு வந்த மாகந்துர மதுஷ் உள்ளிட்ட பல சந்தேகநபர்களை பாதுகாப்பு பிரிவினர் நாட்டிற்கு அழைத்து வந்திருந்தனர்.

இவ்வாறான திட்டங்கள் கடந்த காலங்களில் முன்னெடுக்கப்பட்டுவந்த பின்னணியில், ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவின் ஆட்சியில், இடைக்கால பொலீஸ் மாஅதிபராக நியமிக்கப்பட்டுள்ள தேசபந்து தென்னக்கோன் மற்றும் பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் டிரான் அலஸ் ஆகியோர் இணைந்து தற்போது யுக்திய திட்டத்தை ஆரம்பித்துள்ளனர். ●